திராவிடநாடு

21—5—61 | வார வெளியீடு | விலை 16 காசு

விரைந்து வாரீர்

[சா. கா. சாகுல்அமீது]

அழற்பட்ட புழுவெனவே துடித்த போதும்
அடிபட்ட சேயெனவே அழுத போதும்
சுழற்பட்ட புணையெனவே சுழன்ற போதும்
சுடுவனத்தில் தனிக்கொடியாய்த் தவித்த போதும்
நிழற்கெட்டு வெயிற்பட்டுத் துடித்த போதும்
நிலைகெட்டுத் துயருற்றுத் துவண்ட போதும்
விழிகெட்டு வழிவிட்டு நடந்த போதும்
விதியெனவே மதிக்கின்றீர் திராவி டத்தீர்!

விதியில்லை வினைதந்த விளைவு மில்லை
விளைவுக்கு வினையுமில்லை விளைவ தெல்லாம்
மதியில்லார் சதியன்றி மற்றென் றில்லை
வஞ்சனையின் வடக்காளர் வரியின் மூலம்
நிதிபெற்று நீதியற்ற நிலையில் நின்று
நிலமாளும் உரிமைபெற்ற நிலையி னலிக்
கதியுற்றோம் கடல்சூழ்ந்த திராவி டத்தை
கடமையுடன் விடுவிப்போம் விரைந்து வாரீர்!

உபசாரம்

—[கனகு]—

“நீங்கள் எழுதியுள்ள கவிதைகளை எல்லாம் பார்த்தேன். மிகவும் அருமையான கவிதைகள், இவ்வளவு சிறப்பாகக் கவிதைகள் எழுதும் நீங்கள், இன்னும் மக்களிடையே விளம்பரம் பெருமலிருப்பதுதான் என் மனத்தை உறுத்துகிறது. உங்கள் கவிதைகளைத் தொடர்ச்சியாக என்னுடைய கிழமை இதழில் வெளியிடுவது என முடிவு பண்ணியிருக்கிறேன்.’’

“மிகவும் நன்றி—நான் இப்போது வந்தது......’’

“இப்போது வந்தது?’’

“...நான் பல இடங்களிற் சுற்றியலைந்துவிட்டேன். வருவாய்க்கு வழியே கிடைக்கவில்லை. உங்களிடம் ஏதேனும் வேலை கேட்கலாமென்றுதான் இப்போது வந்தேன்.’’

“என்ன! — அப்படியா செய்தி? நீங்கள் அப்போதே வந்திருக்கலாமே என்னிடம். இப்போதுகூட ஒன்றும் கெட்டுவிடவில்லை. உங்களுக்குத் தேவை இப்போது வேலை தானே?’’

“ஆமாம், எந்த வேலை வேண்டுமானுலும் செய்கிறேன் உங்கள் அலுவலகத்தில்.’’

“சேச்சே! அப்படியேன் சொல்கிறீர்கள்—எந்த வேலை வேண்டுமானுலும் செய்கிறேன் என்று! உங்களுக்கு நம் அலுவலகத்தில் ஆசிரியர் குழாத்திலேயே ஒரு வேலை தருகிறேன். சம்பளம் நூற்றைம்பது ரூபாய்!’’

“உண்மையாகவா?’’

“பின்னே! உபசார வார்த்தை என்று எண்ணினீர்களா?—இதெல்லாம் உபசார வார்த்தையில்லை. நடக்கவேண்டியதைத்தான் சொன்னேன். நாளைக்கே வந்து வேலையை ஒப்புக்கொள்ளுங்கள்.’’

“மிகவும் நன்றி. உங்களை எப்படி வாழ்த்துவது என்று தோன்றவில்லை.’’

“ஆமாம், நீங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள்?’’

“திருவொற்றியூரில் இருக்கிறேன்’’

“திருவொற்றியூர் இங்கிருந்து வெகு தொலைவாயிற்றே!—பாவம், நீங்கள் அங்கிருந்து வருவதானுல் மிகவும் சிரமம். போக்குவரத்துச் செலவே ஏகப்பட்டது ஆகும்.—ஒன்று செய்யுங்களேன். நீங்கள் நாளைக்கே இங்கே வேலையில் சேர்ந்துகொண்டதாக வைத்துக் கொள்ளுங்கள். முதலில் நம் அலுவலகத்துக்கருகில் நீங்கள் குடியிருப்பதற்கு ஒரு வீடு பார்த்துக்கொள்ளுங்கள். பிறகு வேலையைக் கவனிக்கலாம்!’’

“இந்தப் பக்கம் வாடகை அதிகமாகக் கேட்பார்கள். முன் பணம் வேறு கொடுக்கவேண்டும்.

“கவலைப்படாதீர்கள். எல்லாவற்றிற்கும் நான் ஒத்தாசை செய்கிறேன்.’’

“உண்மையாகவா?’’

“என்ன இப்படி ஐயப்பாடு கொள்கிறீர்கள்! என்னைப்பற்றி உங்களுக்கு அதிகம் தெரியாது. வேண்டுமானுல் பக்கத்தில் விசாரித்துப் பாருங்கள். சொல்லுவார்கள்!’’

மேலே என்ன வினவுவார் புலவர் செம்பொன்னன். உள்ளம் நிரம்பிய மகிழ்ச்சி வெள்ளத்தில் உடலைத் திளைக்கவிட்டவண்ணம் அங்கிருந்து கிளம்பினுர். நேரே அவர்தம் வீடு நோக்கிச் செல்லவில்லை. ‘புயல்’ அலுவலகத்திற்கு அருகில் ‘வீடு காலி’ என்று எங்காவது விளம்பரப் பலகை தென்படுகின்றதா என்று தேடப் புறப்பட்டார். காலையிற்கூட அவர் ஒன்றும் சாப்பிடாமற் கிளம்பியவர். புயல் அலுவலகத்திற்குள் நுழையும் வரை, அவர் பசி, யானைப் பசியாகத்தான் இருந்தது. ‘புயலி’ன் தலைமையாசிரியரும், உரிமையாளருமான திருவாளர் கார்வண்ணனின் வார்த்தைகளைக் கேட்டதும், அவர் தம் பசி இருந்த இடம் தெரியாமற் பறந்தோடிவிட்டது. இனி அவருக்கு இராத்திரி உணவுகூட வேண்டுவதில்லை. ஒருவேளை எப்போதுமே அவருக்கு இனிப் பசி எடுக்காமல் இருந்தாலும் விந்தையில்லை. நூற்றைம்பது ரூபாய்ச் சம்பளத்தோடு திடீர் என்று வேலை கிடைத்து, வீடு வாடகைக்கு அமர்த்துவதற்கான முன்பணம் முதலிய அனைத்தையுமே வேலை தந்த பெரிய மனிதரே கொடுக்க முன்வருவதானுல் யாருக்குத்தான் பசி எடுக்கும்?

மறுநாள் அதிகாலையிலேயே கிளம்பிவிட்டார் செம்பொன்னன் வீட்டிலிருந்து. ஊர்தியிற் போக வேண்டும் என்பதுதான் அவர் ஆசை. அதற்கு ஒட்டமில்லை அவரிடம். பேசாமல் கால் நடையாகவே—ஓட்டமாகவுந்தான்—தன் பயணத்தைத் துவக்கினுர். ஐந்து கல் தொலைவை அப்படிக் கடந்து வருவதற்கும், புயல் அலுவலகம் தன் அலுவல் நேரப்படி திறக்கப்படுவதற்கும் சரியாக இருந்தது. வெளியில் சற்று நின்று ஓரளவு நடந்த களைப்பைப் போக்கிக்கொண்டு, மெல்ல உள்ளே எட்டிப் பார்த்தார் செம்பொன்னன். எதிரில் ஒருவர் கால் மேல் கால் போட்டுக்கொண்டு அமர்ந்திருந்தார்.

“வணக்கம் ஐயா!’’

மெல்ல உள்ளே நுழைந்த செம்பொன்னன் கூறினுர்.

“யார் வேண்டும் உங்களுக்கு?’’

அமர்ந்திருந்தவர் மிடுக்கோடு கேட்டார்.

“ஆசிரியரைப்பார்க்கவேண்டும்!’’

“எந்த ஆசிரியரை?’’

“ஆசிரியர் கார்வண்ணனை.’’

“அவர் இங்கே இல்லையே! இன்னும் வரவில்லையே!’’

“எப்போது வருவார்?’’

“சொல்லமுடியாதே!’’

“நான் சற்று நேரம் இங்கே காத்திருக்கட்டுமா?’’

“உங்கள் விருப்பம்.’’

இடையில் அங்கு வந்த அலுவலகப் பையன், அந்த இருவர் பேச்சையும் வியப்புமேலிடக்கேட்டுக்கொண்டிருந்தான்.

பேச்சு முடிந்த பின் பக்கவாட்டில் திரும்பிய அந்த உட்கார்ந்திருந்த ஆசாமி, அலுவலகப் பையன் அங்கே நிற்பதைக் கண்டதும், அவன்மீது சீறிச் சினந்துகொண்டார். “போ, போ, இங்கே நிற்காதே’’ என்று அவனைத் துரத்தினுர்.

அவர் பையனை அதட்டிய முறையைப் பார்த்ததும் செம்பொன்னனுக்கு அங்கே நிற்கப்பிடிக்கவில்லை; மெல்ல வெளியே வந்துவிட்டார்.

சற்றுப் பொறுத்து வெளியே வந்தான் அலுவலகப் பையன்.

“என்ன சார், இம்மா நேரம் நீங்க வெளியே நின்னுக்கினே இருக்கீங்க! —அந்த ஆள் படா சோமாறி சார். பொய் சொல்லருன் சார்! நீங்க நேரே உள்ளே போங்க சார்—அந்த ஆளுக்கு ஒண்ணும் ஜவாப் குடுக்காமே’’ என்ருன் அந்த அலுவலகப் பையன்.

‘அடப்பாவி, உண்மையா இது!’ என்று தமக்குள் முணுமுணுத்த

(4-ம் பக்கம் பார்க்க)

சொல் ஒன்று, செயல் வேறு!

மலர் 19] ஆண்டு சந்தா ரூ. 8 (21—5—61) தனிப்பிரதி 16 காசு [இதழ் 43

ஒரு திங்களுக்கு மேலாகியும், இலங்கைவாழ் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்காமல் இருக்கும் இலங்கை அரசின் போக்கு, வியப்பையும் வேதனையையும் உண்டாக்குவதாக உள்ளது.

"இலங்கையில் இப்பொழுது அமைதிநிலவுகிறது" என்று கூறுவதும், அதே சமயத்தில் நெருக்கடி நிலைமைப் பிரகடனத்தை மேலும் மேலும் நீடிப்பதும் அந்த அரசின் கொள்கையாகிவிட்டது போலும் என்று கருதக்கூடிய அளவில் சிரிமாவோ அரசு நடந்து கொள்கிறது.

17—4—61-ல் பிறப்பிக்கப்பட்ட நெருக்கடி நிலைமைப் பிரகடனத்தை 17—5—61-ல் மீண்டும் புதுப்பித்துள்ளனர்—அதாவது நீடித்துள்ளனர். இலங்கை அரசியல் சட்டப்படி நெருக்கடி நிலைமைப் பிரகடனம் ஒரு மாதத்திற்குமேல் செல்லாதாகையால், அதனை மீண்டும் புதுப்பித்து, நீடித்துள்ளனர்.

இந்த நிலைமையில், இலங்கை முழுவதிலும் அமைதி நிலவுவதாக அறிக்கை வெளியிடுவதன் மூலம் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக மற்றவர்கள் எண்ணி வாளா இருந்துவிடுவார்கள் என்று இலங்கை அரசு கருதுமானால், அது, தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும் ஒரு அரசியல் அநாகரிகமாகும் என்பதனை நாம் எடுத்துக்காட்டவேண்டியதில்லை.

சொல்வது ஒன்று; செய்வது இன்னொன்று என்று சொல்லப்படுவதற்கும், இலங்கைஅரசின் நடவடிக்கைக்கும் துளியும் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை.

அமைதி நிலவுவதாகஅறிக்கை வெளியிட்டுவிட்டு, தமிழர் தலைவர்களைச் சிறையில் பூட்டி வைத்திருப்பதும், அவர்கள் மீது விதித்துள்ள தடையுத்தரவுகளை வாபஸ் வாங்காமல் இருப்பதும், உண்மையிலேயே அநாகரிகத்தை அரசியல் வாழ்வுக்குப் பயன்படுத்தி ஏற்றங் காண முனைகிறது இலங்கை அரசு என்றுதான் கருத வேண்டியிருக்கிறது.

இங்குள்ள டில்லி அரசோ, இது குறித்து இதுவரை யாதொரு நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது. நாம் ஏன் இதில் தலையிடவேண்டும்? நமக்கும் இதற்கும் என்ன சம்மந்தம்? என்ற போக்கில் நடந்துகொள்கிறது.

இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் அவதிப்படுகிறார்களே, இது குறித்து உங்கள் கருத்தென்ன என்று ஒரு நிருபர் கேட்டதற்கு,

> "இது உள்நாட்டு விவகாரம், இதில் இந்திய அரசு தலையிடுவதற்கில்லை"—

என்று வெளிநாட்டமைச்சர் கிருட்டினமேனன் அவர்கள் கூறியதாக ஒரு செய்தி பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது.

ஆனால், தமிழ்நாடு அரசு தனது கட்சிக் காரியக் கமிட்டிக் கூட்டத்தில்,

> இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி டில்லி அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றை அண்மையில் நிறைவேற்றியுள்ளது.

இலங்கைப் பிரச்சினையை உள்நாட்டு விவகாரம் என்று கூறும் டில்லி அரசுக்கு, காங்கோவும் லாவோசும் சொந்த விவகாரமாகவும், உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையாகவும் தோன்றுகிறது.

சமாதானப் படை என்ற பெயரால், ஒரு பட்டாளத்தையே காங்கோவுக்கு அனுப்பியிருக்கிறது டில்லி அரசு.

ஆனால், இங்கிருந்து வாழ வழியின்றி, இலங்கை சென்று அவதிக்கு ஆளாகியிருக்கும் தமிழ் மக்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல்,

> அது உள்நாட்டு விவகாரம், அதில் நாம் தலையிடுவதற்கில்லை

என்று ஒரு பொறுப்புள்ள அரசு கூறுகிறதென்றால், அதனை அரசியல் நாகரிகமுள்ள கூற்றென்று ஒப்புக் கொள்ளமுடியுமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

வண்ணம் செம்பொன்னன் உள்ளே நுழைந்தார்.

உள்ளே பிறிதொரு அறையில், கார்வண்ணன் இரண்டு மூன்று பேர்களுடன் கதைத்துக்கொண்டிருந்தார்.

"வணக்கம் ஐயா!"

"..........."

"ஐயா, வணக்கம்."

"..........."

"ஐயா, ஐயா, வணக்கம்"—

மெல்லச் செம்பொன்னன் பக்கம் முகத்தைத் திருப்பினார் கார்வண்ணன். அப்போதுதான் அவரைப் பார்ப்பவர்போல் "வாருங்கள். என்ன செய்தி?" என்று அசட்டையாகக் கேட்டுவிட்டுத் திரும்பவும் மற்றவர்களோடு கதைப்பதில் முனைந்தார்—அந்தப் புயல் ஆசிரியர்.

செம்பொன்னன் நின்றுகொண்டேயிருந்தார். அதிகாலையில் எழுந்து நடக்கத் தொடங்கியது முதல் இன்னும் ஓய்ந்து சற்று உட்காரவில்லை. கால்கள் கடுத்தன. அவர் நின்றுகொண்டேயிருந்தார்.

கார்வண்ணன் கதைத்துக்கொண்டேயிருந்தார்.

செம்பொன்னன் பொறுமையிழந்து திரும்பவும் 'ஐயா' என்று விளிப்பதற்குள் நெடுநேரமாகிவிட்டது.

"என்ன செய்தி? எங்கு வந்தீர்கள்?"

திரும்பவும் அசட்டையோடே வினாத் தொடுத்தார் கார்வண்ணன்.

செம்பொன்னனுக்குத் 'திக்' என்றது. என்றாலும் நம்பிக்கையை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு பேசினார் அவர்.

"நேற்றுச் சொன்னீர்களே, வீடு பார்க்கச் சொல்லி! வீடு பார்த்தாகிவிட்டது. இங்கே பக்கத்தில்தான். வாடகை நாற்பது ரூபாய் கேட்கிறார்கள். முன் பணம் நூற்றைம்பது வேண்டுமாம்.

"எதற்கு வீடு? ஏன் முன் பணம்? எனக்கு ஒன்றும் புலப்படவில்லையே!"

செம்பொன்னன் கார்வண்ணனை உற்று நோக்கினார். அவருக்கு ஐயம்-அவரோடு நேற்றுப் பேசியது இந்தக் கார்வண்ணன்தானா என்று. "நீங்கள்தானே ஆசிரியர் கார்வண்ணன்?" என்று தம் ஐயப்பாட்டை, வாய் மொழியாகவும் வினவினார் அவர்.

கார்வண்ணன் மறுமொழி கூறவில்லை. 'பாவம், இவருக்கு எவ்வளவோ அலுவல்கள் இருக்கும்! அந்த அலுவல்களின் நினைவில் ஒரு வேளை என்னிடம் சொன்னதை மறந்திருக்கலாம்' என்று தமக்குள் அமைதி கூறிக்கொண்டார் செம்பொன்னன்.

"நேற்று நீங்கள் இங்கே வேலை தருவதாகச் சொன்னீர்களே என்னிடம்! வீடுகூடப் பக்கத்திற் பார்க்கும்படி சொன்னீர்களே! — மறந்துவிட்டீர்கள் போலிருக்கிறது!"

"ஓகோ, செம்பொன்னனா! எனக்கு நினைவாற்றல் சற்றுக் குறைவு! ஆமாம், இங்கே குடிவந்துவிட்டீர்களா?"

"இன்னும் இல்லை."

"என்ன, இன்னும் இல்லை என்கிறீர்கள்! — உடனே வந்துவிடுங்கள்."

இப்போதுதான் நிலைகுலைந்து அடித்துக்கொண்ட செம்பொன்னனின் உள்ளம் ஒரு நிறைவுக்கு வந்தது.

"போய் வாருங்கள். முதலில் அந்த வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு வந்துவிடுங்கள்."

"அதற்கு...முன் பணம்...வேண்டும்......கேட்கிறார்கள்!"

"என்னைப்பற்றி அவர்களிடம் சொன்னீர்களா?"

"இல்லை."

"அடடே, அதனால்தான் முன் பணம் கேட்டிருக்கிறார்கள், சரி, இன்றைக்கு நேரே வீட்டுக்காரரிடம் போய் என் பெயரைச் சொல்லுங்கள். அவர் ஒன்றும் மறுப்புச் சொல்லமாட்டார். பணத்தைப்பற்றிய பேச்சையே எடுக்கமாட்டார். போங்கள்......போங்கள்! முதலில் அதை முடித்துக்கொண்டு வாருங்கள்!"

வேறு வழியில்லை. செம்பொன்னன் வீட்டுக்காரரைத் தேடிக் கொண்டு புறப்பட்டார்.

வீட்டுக்காரருக்கு உண்மையில் எவ்வளவோ வேலைகள். அவரைச் செம்பொன்னனால் உடனடியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. அன்று மாலை வரை செம்பொன்னன் அந்தப் பகுதியையே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தார். முடிவாக வீட்டுக்காரரைப் பார்த்தபோது அவர் சொன்னார்;

"முன்பணமில்லாமல் யாராக இருந்தாலும் வாடகைக்கு விடுவது என் வழக்கமில்லை. உங்களைப் பார்த்தால் மிகவும் நல்ல மனிதராகத் தெரிகிறீர்கள். வேண்டுமானால் ஒன்று செய்யுங்கள். ரூ. 150/-க்குப் பதிலாக ஒரு மாத வாடகையை முன்பணமாகக் கொடுத்துவிடுங்கள். நாளைக்கே வேண்டுமானாலும் குடி வந்துவிடுங்கள்"

அந்தச் செய்தியை எடுத்துக் கொண்டு நேரே புயல் அலுவலகத்து ஓடிவந்தார் செம்பொன்னன். அங்கே கார்வண்ணன் இல்லை.

'சரி, ஒரு மாத வாடகைதானே! அதை நாமே எப்படியாவது கொடுக்கமுடியுமா என்று பார்க்கலாம்' என்று முடிவு பண்ணிக் கொண்டு தம் இல்லம் நோக்கி நடந்தார் செம்பொன்னன்.

மறுநாள் — பிற்பகலுக்கு மேல்தான் செம்பொன்னனால் புயல் அலுவலகத்துக்கு வர முடிந்தது. ஆனால், அங்கே கார்வண்ணனைக் காண முடியவில்லை. இரவு எட்டுமணி வரை அலுவலக வாயிலிலேயே காத்து நின்றுவிட்டுப் புது வீட்டை நோக்கி நடந்தார் செம்பொன்னன். அப்போதுதான்—

வீட்டுக்காரரிடம் ஒரு மாத வாடகையைக்கூட முன்னீடாகத் தாமாகவே கொடுக்க வக்கில்லாமற் போனமையும், அதனால் வீட்டுச் சாவியை வீட்டுக்காரரிடமிருந்து வாங்கிக்கொள்ள முடியாமல் சாமான்களை வீட்டெதிரில் இறக்கிப் போட்டுவிட்டமையும், அந்தச் சாமான்களோடு, அந்தச் சாமான்களுக்குக் காவலாகத் தன் இல்லக் கிழத்தியையும், மக்கள் இருவரையும் அங்கேயே விட்டுவிட்டு வந்தமையும் ஆகியனவெல்லாம் அவர் நினைவுக்கு வந்தன.

வீட்டுக்காரர் சற்று இளகிய மனம் படைத்தவர். குழந்தைகளை வைத்துக்கொண்டு, சாமான்களோடு வெளியில் நின்ற செம்பொன்னனின் இல்லக்கிழத்தியின் பரிதாப நிலையைக் கண்டு, வீட்டுச் சாவியைக் கொண்டுவந்து கொடுத்து எல்லாரையும் உள்ளே இருக்கும்படி செய்தார்.

வீட்டில் நாள்தோறும் மினுக்கிடும் விளக்கொளிகூட அப்போது இல்லை. மனையாளும், மக்களும் ஆளுக்கொரு மூலையிற் காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். பாவம், அன்று காலையிலிருந்து அவர்களும் பட்டினி.

சட்டைப் பையைத் துழாவிப் பார்த்தார் செம்பொன்னன். நல்ல வேளை இரண்டு நாலணாக்கள் கிடைத்தன. அந்த எட்டணாவை எடுத்துக்கொண்டு கடைக்கு ஓடி

(14-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

21-5-'61.

தம்பி!

கொளுத்தும் வெயில்
கொட்டும் மழை
கடுங்குளிர்
கருக்கல்
பேய்க்காற்று!

இவை எதனையும் பொருட்படுத்தாது, அவர்கள், கருமமே கண்ணாயினர். பழச்சாறு பருகினர்; பூங்காற்றுத் தேடினர்; புதுப்புனலாடினர்; இசை கேட்டு இன்புற்றனர்; களிப்புத்தரவல்லனவற்றிலே எல்லாம் மாறிமாறி ஈடுபட்டனர், மற்றவர்கள்; அவர்கள், எல்லாம் பெற்றாகிவிட்டது, இனி நமக்குக் குறையேதும் இல்லை, வாழ்க்கை ஒரு இன்பப் பூங்காவாகிவிட்டது; கேட்டது கிடைக்கிறது; தொட்டது மலருகிறது; நினைப்பது நடக்கிறது; இனி நாம் பெற்றவைகளைச் சுவைத்து மகிழத்தான் காலத்தைப் பயன்படுத்தவேண்டும்; கொளுத்தும்வெயில் எனில், குன்றேறிக் குளிர்ச்சி நாடுவோம்; கடுங்குளிர் எனில், கம்பளம் உண்டு, அழகியதாய், வசதியதாய், குளிரைப் போக்கிக்கொள்வோம்; பேய்க்காற்றும் பெருமழையும் குடிசைகளைப் பிய்த்தெறியும், மண் சுவரினைக் கீழே சாய்த்திடும், நம்முடைய கோட்டைமீது வீழ்ந்து அவை தம் வலி விழந்துபோகுமேயன்றி, வேறென்ன கெடுதலைச் செய்திட இயலும்? எனவே ஆடுவோம் பள்ளுப் பாடுவோம், அடையவேண்டியதை எல்லாம் அடைந்துவிட்டோம் என்று அக மகிழ்வோம் என்று இருந்தனர். சிலர் மட்டும், ஓய்வுக்கு நேரம் இல்லை; உறக்கமோ வருவதில்லை; இடுக்கண்கள் இருப்பதாலே எடுத்த காரியத்தை முடித்திட மேலும் மும்முரமாகப் பணியாற்றிடவேண்டும்; எனவே கொளுத்தும் வெயில், கொட்டும் மழை, கடுங்குளிர், பேய்க்காற்று கருக்கல் எனும் எதனையும் பொருட்படுத்தாமல், பணியாற்றிய படி இருந்தனர். மற்றவர் எள்ளி நகையாடினர். "ஏடா மூடா! ஏன் இந்த வீண் வேலை! நான்தான், நீயும் மனித இனம்தானே என்றெண்ணி மனம் இளகி, எண்ணற்றவர்கள் இருந்திட ஏற்றதாம் என் எழில் மணிமாடத்தில், ஆனினம் தங்கிட அமைந்ததோர் இடத்தினிலே, சென்று தங்கிடுவாய், செய்தொழிலைக் காட்டிடுவாய், நல்ல ஊழியன் என்ற பெயரெடுத்து நாலாறும் பெற்று காலத்தைக் கடத்திடுவாய்; உண்ணத் தந்திடுவேன், உழல்வானேன் வயல்தேடி; வண்ணம் இல்லை எனினும், இருந்ததுதான் இந்த ஆடை; அங்கம் மறைத்திட அது போதும் அல்லவோ சொல்; தந்திட நானிருக்க தவிப்பானேன் வேறு பெற; வந்திடு என் முற்றம்; வாழ்வளிக்க முடியும்என்றால்; வதைபட்டுச் சாகாதே, வரம் தந்தேன் உதருதே!" என்று பேசினர். ஆனால், அந்த உழைப்பாளி

'இந்தியர்' ஆகின்றனர்!! (1)

களோ, ஓயவில்லை உறங்கவில்லை, மயங்கவில்லை, மனம் மாறவில்லை. வேலை! வேலை! வேலை! செய்தவண்ணம் இருந்தனர்.

வெட்ட வெளி! பொட்டல் காடு! தண்ணீர் கிடைக்காத வறண்ட திடல்!—இருக்க இடம் இதிலாம்! எழில் இல்லம் இவ்விடமாம்! சுற்றும் மணற்பரப்பு! செடி கொடியும் வாழாது! இங்கு வயலாகும், வாழ்வளிக்கும் வகை பெறுவோம், என்று கதைக்கின்றார், கருத்தறியாச் சிறார்போலே!! வெட்டிவரும் வேளையிலே பாறை இருந்திடுமே — பெயர்த்தெடுக்கும் கருவி எங்கே? பெரும் பள்ளம்தனை தூர்க்க எளிதாகுமோ இவரால்! உவர் மண்ணால் சுவர் எழுப்பி, உயரம்கண்டதுமே, ஒரு நொடியில் சாய்ந்திடாதோ, கூரைமேல்ஏறியதும்! கதவெங்கே, தாள் எங்கே? கனமான-பூட்டுமுண்டோ? ஓடுண்டோ, ஒய்யாரம் தரவல்ல பலகணியும்தானுண்டோ! கள்ளிக்கும் சுள்ளிக்கும், கடும் விஷப்பாம்பினுக்கும் அல்லாமல் கனி குலுங்கும் தருக்கள் வளருதற்கோ, தக்க இடம் இஃது! ஈதெல்லாம் அறியாமல், ஏதேதோ எண்ணமிட்டு ஓயாது உழைக்கின்றார், ஒரு பலனும் காணார் காண்!!— என்று, 'உடையவர்கள்' இகழ்ச்சியுடன் பேசி நின்றார்; இவர்களோ அவர் வார்த்தை எமக்கல்ல என்று எண்ணி, இதயம்தனில் பதிந்த 'எழிலிடம்' அமைத்திடும் ஓர் ஏற்றமிகு செயலதனில், ஆற்றலெலாம் செலவிட்டார்.

பாறை கண்டபோது பதறினார் இல்லை, அவர்; பிளந்து பெயர்த்தெடுத்து, பொடியாக்கி, கீழ்பரப்பி, வலியூட்டும் வகைபெற்றோம், இல்லத்தின் அடித்தளம் தனக்கென்று மகிழ்வுற்றார். கல் உடைக்கக் கரம் உண்டு; கருத்திலே உறுதி உண்டு; என்ன இனி நமக்குக்குறை எழுப்பிடுவோம் நம் இல்லம்; எத்தனைதான் அழகிய தாய் இருந்திடினும் மற்றதெல்லாம் இன்னொருவர் இடமன்றோ; இருந்திடலாம் என்கின்றார், தயவன்றோ காட்டுகின்றார்; கொத்தடிமை ஆக்குதற்கே கூவி அழைக்கின்றார்; இத்தரையில் நமது இல்லம் இனிதாய் அமைத்திட்டால், என் இல்லம்! எழில் இல்லம்! என்றெண்ணி மகிழ்ச்சியுடன் இருந்திடலாம் காலமெல்லாம். இன்று பாழ்வெளியாய் இருந்திடும் இவ்விடத்தில், முன்னம் ஓர் நாளில், உலவினராம் முடியுடையோர்; படை நடந்த இடம் இதுவாம்; பண்புக்குப் பெட்டகமாம்; பார்புகழ வாழ்ந்தனராம்; பலநூலும் கண்டனராம்! அந்த இடம் தனக்கே, நாம் உரியர் என்பதனை இன்று அறிந்திட்டோம், இனி ஏற்பது இகழ்ச்சிஅல்ல எனக்கூறித், தந்தது தின்று தெந்தினம்பாடித், தருக்கரின் தாளில் தலையினை வைத்து இழுக்கினைத் தேடிக்கொண்டிடப் போமோ! செச்சே! நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு என்று நவின்றாரே, கவிஞர்பிரான். நமக்கும் நற்பாடம், அக்கவிதை தாராதோ!! 'நாமிருக்கும் நாடு நமது' என்பது கண்டோம் என்ற கவிதை, நமக்கும் சேர்த்தன்றோ! ஏன் இனி நமக்கு இச்சகம் பேசிப் பிழைத்திடும் பிச்சை வாழ்வு! ஏற்கோம் இனி இழிநிலை—எடுப்போம் புதுமுயற்சி—கட்டிமுடிப்போம், எமதிடம்—என்று சூளுரைத்தார், எதிர்ப்பட்டோர்கள் இடி இடியெனச்சிரித்து, "கண்டீரோ பெருவீரர்! அறிந்தீரோ இவர் தீரம்!! குன்று பெயர்த்தெடுத்து செண்டு ஆக்கப்போகின்றார்! நின்றிடுக என்று கூறி, கடல் அலையைத் தடுத்து நிறுத்தப் போகின்றார்! மணலெல்லாம் குவித்தெடுப்பார், மரகதக் குவியலாக்கிடுவார்! நத்தையில் முத்தெடுப்பார்; தாழையில் வாழை காண்பார்; தந்தம் பெற்றிடுவார் தத்திடும் அணில் அதனில்; ஏ! அப்பா! இவர் ஆற்றல், எவர்க்குண்டு; கண்டுரைமின்!"—என்று எவரெவரோ ஏளனம் பேசி நின்றார். பணிபுரியும் போக்கினரோ நீராடி நீந்துகையில், நீர்புரளும் மீனினம் கொத்திடும் விதமாக இவர் ஏதோ சத்தமிட்டுக் கிடக்கின்றார், நமக்கென்ன இதுபற்றிக் கவலை என்று கூறுவதுபோலாகித் தூற்றுவோர் தூற்றட்டும் புழுதிவாரி வீசுவோர் வீசட்டும் நம் கடன் பணிசெய்து கிடப்பதே; அவர்க்குரிய ஆற்றலை அவர் காட்டி நிற்கட்டும்; நம்கடமை நாமறிந்து நமது இல்லம் அமைத்திடும் ஓர் நற்பணியில் இறங்கிடுவோம்; வண்டாடும் சோலையிலே வண்ணமயில் ஆடுகையில், வளைந்தவால்காட்டி தாவிடுமாம் மந்தியுந்தான்; மந்தி நடத்திடும் ஓர் நாட்டியமே பாடமாகக்கொண்டிடுவோம் என்று அந்தக் கோலமயில் எண்ணிடுமோ? ஏதேதோ இன்ப நினைவுடனே ஏந்திழையாள் இடுப்பில் குடம் வைத்து இன்பன் இதயம் துவைத்துச் செல்கையிலே, குப்பைகிளறிடும் ஓர் குக்கல்காணின், நின்று, என்னே! இதன் திறமை! எதற்குண்டு இவ்வாற்றல்! என்றா எண்ணி நின்று எக்களிப்பு கொள்கின்றாள். இவரோ 'இருப்பவர்கள்' — இருப்பதுவோ பறித்தவைகள்— நமக்கோ இடம் இல்லை, நம் இடமோ மாற்றாரால் பாழாகிக் கிடக்கும் இடம்! நாம் அதனை அறிந்தபின்னர், திருத்த, புதுப்பிக்க திறம்பெற்றுப் பணிபுரியத் துடித்திடுவதல்லாமல், தூற்றல் கணைதொடுத்து தூய்மையினைக் கெடுத்திடுதல் நன்றாமோ! அழைக்கிறது, அறம், அன்பு!! ஆற்றலெல்லாம் அவைதமக்கே! என்று எண்ணி, ஈடுபட்டார் எடுத்தபணியதனில். பாழ்வெளியில் ஓர் பசுமை பாங்குறவே வந்தது காண்! வெட்டவெளியதுவும், வேற்றுருவம் பெற்றது காண்! சின்னஞ்சிறு கூடம் — கேணி ஆங்கொன்று—அதன் பக்கம் பூச்செடிகள்—மாடியும் அமைத்திடலாம், அடித்தளம் வலிவுற்ற தென்பதனால்; காற்றும் வெளிச்சமும் களிப்பூட்ட வருமாறு கட்டினர் காண் புது இல்லம்.

அழகுண்டு அளவறிந்து; வசதியுண்டு, வகை அளவு! இந்த முறையில் நல்லில்லம் அமைத்து அவரும் இன்புற்று, நம் உழைப்பு வடிவம் பெற்று, நமதாகி நின்றது காண்! எவர் எண்ணினர் இது இயலும்

என்று முன்னம். என்னென்ன ஏச்சுகள், எத்துணை ஏளனங்கள்! கூடை எடுத்து நாம் சென்றிடுவோம், குரலெழுப்பி, கல் வீசி குலைத்திடுவார் நம் ஆர்வம். எழுப்பிய சுவர் தன்னைக் கைத்தடியால் சாடி, "ஏடா பயலே! இஃது இரு நாட்கள் நின்றிடுமோ?" என்று கூறி, அச்சம் எழச்செய்து மகிழ்வுற்றார். கட்டியவர் எவர் அப்பா? கல் உடைக்கும் சொல்லரசா? அன்றி, மண் பிசையும் மன்னரா? எவர் திட்டம் இட்டவர்கள்? இளங்கோவா, கடுங்கோவா? குழி தோண்டி நின்றவர்கள், கூலி மிகப் பெற்றனரோ? கழி வாங்கச் சென்றவர்கள், கணக்குக் காட்டினரோ, சரியாக? செம்பியன் எனும் உங்கள் தோழன், செப்பினனும், மற்றவர் மரப் பொம்மை, நானே மாமேதை! என் திறமே, இவ்வில்லம்!! என்றெல்லாம். அறிவீரா? ஏன் அந்த ஆணவம், என்று கேட்டுக் கொதித்தானும், இரும்பொறையன், உண்மையா? என்னமோ, பிள்ளைகளா! எப்படியோ ஒரு வழியாய், இல்லம் அமைத்தீர்கள்! இனித்தான் இருக்கிறது, உமக்கு இன்னல் அடுக்கடுக்காய்!! இடம் பிடிக்க முனைவோர்கள், இடித்துக் கொள்வரன்றோ! என்னால் இது என்பதனால், எனக்கே எல்லாமென்று, எவனேனும் எக்காளம் எழுப்பிடலாமன்றோ! நான் எழுப்பியது இந்தச் சுவர்—இதை நானே இடித்திடுவேன் என்று இறுமாப்பாளன், எடுத்திடுவான் கடப்பாரை!! ஆன செலவு அதிகம் காட்டி அடித்தான் இலாபம் இவன் என்று, ஒருவன் மற்றொருவன்மீது உமிழ்ந்திடுவான் கோபத்தை! கலாம் விளையும் இல்லத்தில், கண்டவர் ஏசிடுவார்! கார் தந்த நீர்த்துளியால் கலம் நெல் விளைவதுண்டு—கருத்தறியாதார் வயலுக்கு உரியரென்றால், களமன்றோ களமாகும்!! என்ன நேரிடுமோ? எத்தனை நாள் இவ்வாழ்வோ? எனக்கென்னவோ இஃது நீடித்த இன்பம் எனத் தோன்றிடவே இல்லை, சொன்னேன். கூடி வாழ்ந்திடும் குணம் கொண்டோர் என்று இன்று கூறுகின்றீர்; கேட்கின்றேன்; ஆயின் குமுறும் உள்ளத்தான், குறை காணும் எண்ணத்தான், குலவி இருக்கின்றான்; ஓர் நாள் குத்திக் குடலெடுக்கத் துடிக்கின்றான்! அறிந்ததை அறைந்தேன்; ஆசீர்வாதம், வாழ்க!—என்று பெரியவர்கள் சில பேர்கள் பேசினர், இல்லம் கண்டு. கட்டி முடித்திட்ட களிப்பதனில் மூழ்கியவர், கலகமூட்டும் பேச்சுக்குக் காதும் கொடுக்கவில்லை; கல்லெல்லாம் கதை சொல்லும், இல்லம் இஃதன்றோ! மண்ணதனில் சிந்தியது மழை நீரோ? இல்லை, இல்லை! செந்நீரும் கண்ணீரும் கொட்டியன்றோ, செம்மை கண்டோம். இந்த இல்லத்தில், அன்பு அரசோச்சும், அறிவு ஒளி அளிக்கும்; அறம் வழி காட்ட, ஆற்றல் நடைபோட, அனைவரும் நாம், இலட்சியம் அடைந்திடும் முறை வகுக்க, பாசறையாக அமைந்தது காண் நமது இல்லம்; அனைவருக்கும் இது இல்லம்—அனைவரும் அமைத்த இல்லம்—அவர்க்கு எது இவர்க்கு எது என்று அளவு காணும் முறைக்கு இங்கு அணுவளவும் வேலை இல்லை. இகல் வெல்ல வேண்டுமெனில் நம் இதயங்கள் ஒன்றாகி, வெவ்வேறு உருவங்கள், எண்ணமோ ஒன்றேதான், என்று எவரும் எண்ணிப் போற்றிட, வாழ்ந்திடுவோம். இல்லம் அமைத்ததுவும், இருந்து மகிழ்ந்திடவா? இல்லை! இல்லை! மன்றமாக்கி, இம்மனையில் நாம் இருந்து, கொண்ட நம் குறிக்கோள் தனக்காக, தொடர்ந்து பணியாற்ற, தக்கமுறை, வழி பலவும், கண்டறிய, திட்டமிட! இந்த எண்ணம் நம்மை ஆட்கொண்டதென்றால், இடத்தில் இடம் காண, எண்ணுவரோ, எவரேனும்! கேணித் தண்ணீர் இறைத்து, கீழ் உள்ள கற்களை எடுத்துப் பங்குபோட, கருதுபவர், கசடரன்றோ! நாமென்ன இந்த விவரமெல்லாம் அறியாமல், வீண்வாதம், மனபேதம், கொண்டிடக் கடையவரோ? நம்மில் சில பேர்கள் கூடம் இருந்திடுவர், அவ்வேளை, திண்ணையே நமக்குக் கூடமாய், அமையாதோ! தோட்டத்து வேலைதனைத் துரைசாமி கவனித்தால், கூட்டி மெழுகிட குப்பன் முன் வாரானோ? கூட்டி மெழுகிடும் குப்பன், மற்றோர் நாள், கூடத்தில் இருக்கையிலே ஓய்வாகச் சாய்ந்துகொண்டு ஒரு முழுங்கு தண்ணீர் பருகிடத் தருவாய் என்று அண்ணலை அழைத்திட்டால், கேணி வேலை வேணு பார்ப்பான், என் வேலை அஃதல்ல, என்று கூறிடுவான். நாமெல்லாம் ஓர் குடும்பம்—நமது இல்லம் இக்கூடம்—இங்கு, நான் மேல் நீ அல்ல, என்ற பேச்சுக்கே இடமில்லை, என்றெல்லாம் எண்ணி அவர் இதயம் களித்திருந்தார்.

ஏதேதோ திட்டமிட்டோம், எப்பலனும் கிட்டவில்லை. சிண்டு முடிந்துவிட்டோம், சிக்கறுத்துக் கொள்கின்றார். கலகம் மூட்டுகிறோம், கைகொட்டிச் சிரிக்கின்றார். கண் காட்டி அழைக்கின்றோம், கைவீசிப் போகின்றார். ஏதேது இந்த இல்லத்தார், ஏற்றம் மேல் ஏற்றம் பெற்று, எடுத்த காரியம் முடித்து, இன்பத் திராவிடம்அமைத்து, எளியோர் எனினும் வலியோர் பெற்றிடா, வெற்றிதனையும், கூடிப் பணியாற்றி, கொள்கை காத்து நின்றால், பெற்றிடுவார் என்ற பேருண்மைதனை நிலைநாட்டிவிடுவார் போலும், எங்ஙனம் கண்டிடுவோம், இவர் வெற்றி பெறுவதனை! என்னாகும் நமது முன்னைய பேச்செல்லாம்! மண்ணாகிப் போச்சுது பார், மற்றவர் பேச்செல்லாம், கண்ணீர்த் துளிகளன்றோ, காரியத்தை முடித்துவிட்டார், என்றெல்லாமன்றோ ஏசுவர்; மற்றவர்கள். நாம் இதற்கு என் செய்வோம். அணிவகுப்புதனைப் பிளக்க ஆயிரதெட்டும் செய்தோம்; அத்தனையும் ஆடிக் காற்றிடைபட்ட பஞ்சாகிப் பறந்தனவே! பேதம் வருமென்று, பேராவல் கொண்டிருந்தோம்—அண்ணன் தம்பி என்று அவர்கள் குலவுகின்றார்! ஐயயோ! ஆபத்து! நாம் அழிந்திடுவோம், இது

வளர்ந்தால். என்ன விலை கொடுத்தேனும், எப்பாடுபட்டேனும், சின்னத்தனமான செயலெல்லாம் செய்தேனும், பொன்னைத்தான் இழந்தேனும், கண்ணே! மணியே! என்று கனிவு பேசிப்பார்த்தேனும், உடைத்தாகவேண்டும் இந்த உள்ளஉறவுதனை; பிளந்தாகவேண்டும் இந்தப்பெரும் படையை, அணிவகுப்பை; என்று எழுந்தனர், மனம் பொறுத மாற்றார்கள் — கன்னிப் பெண், கண்ணுக்கு மையிட்டு, கார் கூந்தல் தன்னிலே மணமல்லிதனைச் சூடி, சின்ன இடை துவள, அன்ன நடை நடந்து, மணப்பந்தல் போகுமுன்னம், மணவாளன் காணுமுன்னம், கண்ணாடி முன் நின்று, கோலம் திருத்த எண்ணிச் சென்றிடும் வேளையிலே, கண்ணாடி அதன்மீது, கல்வீசி ஒரு சிறுவன், உடைத்திட்ட பான்மைபோல, மாற்றாரின் திட்டம், மனையில் கலாம் விளைத்து மகிழ்ச்சிதனைக் குலைத்து, உறவு முறித்து, ஓர் ஊனம் ஏற்படச் செய்துவிட்டது, சென்ற திங்கள் ஒன்பதாம் நாள்—அந்நாள் துந்துபி முழக்கினர் மாற்றார், துடியாய்த் துடித்தனர், இல்லம் கண்டோர்—இன்பத் திராவிடம் காணப் பாசறை அமைத்தோர்—திராவிட முன்னேற்றக் கழகத்தினர்—நீயும் நானும்—நமது உடன்பிறப்பாளர்களாகிவிட்ட இலட்சக்கணக்கான திராவிடரும்.

ஆனால், தம்பி! மாற்றார் திட்டமிட்ட அளவுக்கோ, விரும்பிய வகையிலேயோ, நமது கழகத்துக்கு ஊறு நேரிட்டுவிடவில்லை, என்பது இந்த ஒரு திங்களிலேயே தெள்ளத்தெளியத் தெரிந்துவிட்டது. ஏற்பட்ட ஊனம், நமக்கு அதிர்ச்சிதரத் தக்கதாகத் தெரிவதற்குக் காரணம் அதன் அளவு அல்ல; நமது குடும்பம் அத்துணை பாசத்தால் கட்டுண்டு இருப்பதால், இதிலே சிறு பேதம், கீறல், வெடிப்பு, பிளவு, ஏற்பட்டாலும் நம்மால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. நாம்படும் வேதனையைக் காணும் அரசியல் வட்டாரத்தினர் பலரும் வியப்படைகின்றனர். இதென்ன இப்படிக் கலங்குகிறார்களே! ஒரு கட்சி என்றால், சிலர் விலகுவதும், வேறு சிலர் புகுவதும், சாதாரண நிகழ்ச்சி தானே!! இதற்கும் பிறகு இருக்கத்தக்கதுதானே, கட்சி என்ற பெயருக்கே பொருத்தமுள்ளதாகக் கருதப்படும்—என்று கூறுகின்றனர் — கேட்கின்றனர், எனக்கேகூட, அவர்கள் அப்படிக் கேட்கும்போது வெட்கமாகக்கூட இருக்கிறது. இருப்பினும் என் இதயம்தான், நீ அறிவாயே, தம்பி! எவர் நம்மை விட்டுப் பிரியினும், என்னால் சகித்துக் கொள்ள முடிவதில்லை, இது தெரிந்துதான், அண்ணா? சிலர், உன்னை மிரட்டுகிறார்கள், என்றுகூடத் தம்பியரில் சிலர் கூறுகின்றனர்,

தம்பி! சின்னாட்களுக்கு முன்பு நடைபெற்ற கூட்டமொன்றில், ஆர்வம் கொந்தளிக்கும் நிலையில் பேசிய தம்பி ஒருவர், சொன்னார், "அண்ணா! ஆயாசப்படாதீர்கள்! சிலர் உம்மைவிட்டுப் பிரிந்தனர்; நானும்தான் வருந்துகிறேன்; ஆனாலும் என்ன? நாங்கள் இருக்கிறோம் அணி அணியாக! உம்மை அண்ணனாக ஏற்றுக்கொண்டவர்கள். அன்புக்குக் கட்டுப்பட்டவர்கள்: கழகத்தின் ஆணைப்படி நடப்பவர்கள். தம்பிமார்கள் இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள், அண்ணா! கவலைப்படாதீர்கள்!" என்று பேசினார். இனிய இசையாக இருந்தது அந்தப் பேச்சு—ஆனால் ஒரு கணம்தான் — மீண்டும் அந்தப் பழைய நினைப்பு — பழைய கவலை! நான் பேசும்போது சொன்னேன்: "எட்டுக் குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய், திருவிழா காணச் சென்றபோது, ஒரு குழந்தை காணாமற் போய்விட்டால், பரவாயில்லை, எட்டில் ஒன்று போனால் என்ன ஏழு இருக்கிறதே, என்றெண்ணியா திருப்தி அடைகிறாள். இல்லையே! ஏழு பிள்ளைகளையும், திக்காலொருவராக அனுப்பி, காணாமற்போன பிள்ளையைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி அல்லவா அனுப்புவாள்! அதுபோல, என்னுடன் எண்ணற்றவர்கள் உள்ளனர்—ஆயினும் அதனால், பிரிந்தவர்கள் பற்றிக் கவலை கொள்ளாமல் இருக்க முடிகிறதா! எட்டுப் பிள்ளைகளைப் பெற்ற தாய், காணாமற்போன பிள்ளையைக் கண்டு பிடித்துக் கொண்டுவரும்படி, மற்ற ஏழு பிள்ளைகளைக் கேட்டுக்கொண்டதுபோலத்தான், என்னுடன் இருக்கும் தம்பிமார்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன், விலகிய, வழி தவறிய, அந்தத் தம்பிகளையும் தேடிக் கண்டுபிடித்துத் திருத்தித் திரும்ப அழைத்துக்கொண்டு வாருங்கள்!"

தம்பி! நான் சொன்னது சுவைக்காக அல்ல—என் மனம் அப்படி.

விலகியவர்களிடம், பாசம் குறையாமல் இருப்பதற்கு, வேறோர் காரணமும் இருக்கிறது — அவசியம் கூடத்தான் இருக்கிறது.

நாம் ஈடுபட்டிருப்பது, தாயக விடுதலைக்கான அரும் பணியில். இதற்கான ஆற்றல் அளித்திடவல்ல எவரையும் நான் இழந்துவிட விரும்பலாமா? வாட்போர் புரியும் வீரன், குத்தீட்டியையும் கூடத்தானே வைத்திருக்கிறான். அஃதேபோலத்தான், நாட்டுவிடுதலை எனும் நற்பணிக்காக, அனைவரும் தேவைப்படுகிறார்கள் இதிலே இழப்பின் அளவும், தரமும் அல்ல, இழப்பு என்பதே இதயத்துக்கு அதிர்ச்சி தரத்தக்கதுதான். கிடைக்கும் வாய்ப்பினை எல்லாம் ஒன்று திரட்டி, களம்செல்லவேண்டிய வேளையில் களத்தில் பயிற்சிபெற்றவர்கள், அதைவிட்டு விலகுவது என்றால், மனதுக்குச் சங்கடமாகத்தானே இருக்கும்?

தலைவிரி கோலமாக ஓடி வருகிறாள் ஓர் மூதாட்டி—வாழ்ந்தவள் இன்று வதைபடுகிறாள் என்பது பார்க்கும் போதே புரிகிறது. இரத்தம் சொட்டும் வாயுடன் ஓநாய் அவளைத் துரத்திக்கொண்டு வருகிறது அலறுகிறாள் அம்மூதாட்டி, அந்தக் கதறல் கேட்டு, வேறோர் புறமிருந்து ஓடோடி வருகிறான் ஓர் வீரன்—கையில் வேல் கொண்டு! அவனை நோக்கி ஓடுகிறாள் அந்த அபலை. தன்னைத் துரத்தும் ஓநாயைத் திரும்பிப் பார்க்கிறாள்—திகில் கொள்கிறாள்—ஆனால் எதிர்ப்புறம் பார்க்கிறாள், வேல் உடையோன் வருகிறான்—அப்பா! காப்பாற்று! என்று கூறியபடி, கீழே வீழ்கிறாள். ஓநாயைக் கொன்று மூதாட்டியைக் காப்பாற்றவேலாயுதத்தைப் பயன்படுத்தவேண்டியவன், வழியில் உள்ள காட்டாற்றினிலே துள்ளிடும் வாளை மீது அந்த வேலினை வீசிடக் கண்டால், தம்பி! மூதாட்டியைத் தள்ளிவிடு, ஓநாயேகூட அல்லவா, இப்படி ஒரு மனமா? என்றெண்ணித் திகைத்துவிடும்!!

அதுபோலல்லவா, செய்துவிட்டனர்.

எந்த இடத்திலே உறுதியை எதிர்பார்த்தேனோ, அங்கு அல்லவா, ஏற்பட்டுவிட்டது, மனத்தளர்ச்சி.

என் சங்கடத்துக்குக் காரணம் அதுவன்றோ!

ஒன்று சொல்லுவேன் தம்பி! எனக்கென்னமோ, பேசத் தெரிந்தவர்களெல்லாம், திருஇடத்தைப்பற்றியே பேசவேண்டும், எழுதத் தெரிந்தவர்களெல்லாம் இன்பத் திராவிடத்தைப்பற்றியே எழுதவேண்டும், ஆற்றல் உள்ளவர்கள் அனைவரும் தமது ஆற்றலை, இந்த அருமைத் திராவிடம் விடுதலைபெறப் பயன்படுத்த வேண்டும், என்று தோன்றுகிறது. காணும் செங்கரும்பு அவ்வளவும், நமது குழந்தைக்குவேண்டும் என்று எண்ணுவது போன்ற பேதை நெஞ்சம்: என்செய்வது!

எனினும், என் மனநிலை அறிந்து, பலர், முன்னிலும் அதிக மும்முரமாகப் பணியாற்றி என் மனச்சோர்வினைப் போக்கி வருகின்றனர், அஞ்சற்க! என்றும், கழகப்பணிக்கு ஆவன செய்வோம் என்றும் களிப்பூட்டும் முறையில் எழுதுகின்றனர்.

விலகியோர், நம்மைவிட்டும் கழகத்தைவிட்டும் விலகினரில்லை. ஆண்டு பலவாக அரும்பாடுபட்டு நாம் கட்டிக் காத்துவரும் கொள்கையை விட்டுமன்றோ விலகிச் சென்றுவிட்டனர்.இனி அவர்தம் போக்கு, நம் மாற்றார்க்கு நிலாச்சோறு! நாம் அது குறித்துக் கவலையற்றுப் பணியாற்றிச் செல்வதே முறை என்று கூறுகின்றார்,

திராவிடநாடு பகற்கனவு என்றும், பிரிந்துபோக வேண்டியதில்லை என்றும், பிரியும் உரிமைமட்டும் சட்டப்படி கேட்டுப் பெற்றுக்கொண்டால் போதுமென்றும், வடநாட்டுடன் ஒட்டி வாழலாம், உறவு கொண்டாடலாமென்றும், வடநாடு கண்டு அச்சம் ஏன் கொள்ளவேண்டும், வடநாடு நரகலோகமுமல்ல; வடவர் யமகிங்கரருமல்லவென்றும், இத்துணை வேகமாக அவர்தம் இந்திய பக்தி முற்றி வருகிற நிலை காணும்போது, இனி ஒரு புதிய சட்டமே செய்து நாட்டுப் பிரிவினை கேட்போரைக் கடுஞ் சிறையில் தள்ளவேண்டும், அப்போதுதான் இந்திய ஒற்றுமை நிலைக்கும் என்று. நேருபண்டிதருக்கே யோசனை கூறக்கூடும் என்றன்றோ தோன்றுகிறது,

தம்பி! இதனைக் கவனித்தாயா? திராவிடநாடு கூடாது என்பதற்கு இந்திய பக்தியை!! இன்று பெற்றுவிட்டவர்கள், புதிய காரணம் எதுவும் கூறினாரில்லை. கூறுதலுடன் ஏற்கனவே நேரு போன்றோர் காட்டிய காரணங்கள் தமது மனதைப் பெரிதும் கவர்ந்து தம்மை இந்நிலைக்குக் கொண்டு வந்தது என்றும் கூறாமல், நேருபண்டிதரின் பேச்சைக் கேட்க மறுத்தவர்களும், இன்று தனது பேச்சைக் கேட்பர், திருந்துவர், ஒப்புதல் அளிப்பர், என்று எண்ணுகின்றனர். எத்துணைத் துணிவு இருத்தல் வேண்டும், அப்படி எண்ணிட!

"நான்" சொல்கிறேன் கேளுங்கள்!—என்று கூறும்போது, அந்த 'நான்' என்பதற்குப் பொருள் யாது கொள்வதோ? நான், நேருவினும் பெரிய நிலைபெற்றோன்; நேரு காட்ட இயலாத காரணம் காட்டவல்லோன்; நேருவுக்கு இல்லை உமது மனம் மாற்றும் ஆற்றல், நான் கொண்டுள்ளேன் என்று பொருளோ—செச்சே! இப்போது அப்படிச் சொல்லமாட்டார்கள் — நவஇந்தியாவும் — சக்தியும் விளக்கை அணைத்துவிடுவார்களே! இருட்டிலா உழலவது!

நான் என்று தம்மை நேருவினின்றும் வேறுபடுத்திக் காட்டுவது, மேலோன் என்பதற்காக அன்று; உங்கள் இனத்தவன் என்ற உரிமையால், நான் கூறுகிறேன் என்பதாகும். — நேரு பெரியவர், பேரறிவாளர்; எனினும் வேறு இனத்தவர்! எனவேதான், அவர் பேச்சை ஏற்க மறுத்துவந்தீர்! இப்போதோ, சொல்வது நான்! சொந்த இனத்தான்! அந்நியன் அல்ல! எனவே நான் சொல்வது கேண்மின் என்ற பொருள்கொள்வது என்றால், அப்போது, ஒரு அடிப்படை உண்மையை, நாட்டுக்கும் உலகுக்கும் அறிவிக்கவேண்டும், திராவிடநாடு பகற்கனவு என இவர்களும் பேசுகின்றனர்; நேருவும் பேசுகிறார்; எனினும் இவர்கள் இனம் வேறு—நேரு இனம் வேறு.

இந்த உண்மையைக் கூறும் துணிவாவது ஏற்பட வேண்டும்; அல்லது இந்தியா, இந்தியன் என்ற உணர்வுதான் உண்மையானது, தேவையானது; கொள்ள வேண்டியது என்று கூறும் நாணயமாவது இருக்க வேண்டும்; இரண்டும் இன்றி, நான் கூறுகிறேன் திராவிட நாடு வேண்டாமென்று, என் பேச்சைக் கேளுங்கள்; நேரு இதனைச் சொன்னபோது ஏற்கமறுத்தீர்கள்—மறுத்தோம். தவறில்லை, ஏனெனில் நேரு எவ்வளவு பெரியவராயினும் நம்மவர் அல்ல, திராவிடர் அல்ல! நானே திராவிடன்! எனவே, என் சொல் கேண்மின்!! என்று கூறுவது வெறும் கேலிக் கூத்தாகும்.

"ஐயன் அழைக்கின்றார்! அகிலம் அறிந்துள்ள ஆற்றல் மிக்கோன் அழைக்கின்றார்! மேதினி கொண்டுள்ள மெய்யெல்லாம் உணர்ந்தவர் காண்! வரலாறு பலவும் கற்றறிந்த பேரறிவாளர்! அவர் காணா நாடில்லை! அவர் உரை கேளா மாந்தரில்லை! அவர் அழைக்கின்றார்! திராவிடம் தனிநாடு என்றெல்லாம் பேசுகிறீர்! பித்துப் பிள்ளைகள்போல் பேதம் பேசலாமோ என்று மெத்த வருத்தப்பட்டு மேலோன் கேட்கின்றார். உலகமே ஓர் அரசாய், ஆகிவரும் நாட்கள் இவை. இந்நாளில் என் நாடு, என்னுடைய மொழி என்று இயம்பிடுதல் ஆகாது, அறிவீனம் என்கின்றார். அவர் அறியாதனவற்றை எவர் அறிவார், கூறுங்கள். ஐயன் அழைக்கின்றார், வந்திடுவீர், சொந்தமுடன். விந்தியமும் இமயமும் விளங்கி நிற்பதுவும், காவிரியும் கங்கையும் கரைபுரண்டு ஓடுவதும், பாரதம் எனும் இந்த மணித்திரு நாடதனில்! இந்த உண்மையினை ஏற்றிடுவீர், வாழ்ந்திடுவீர்! சொந்த நாடு ஒன்று உண்டென்று பேசி நீவிர், தொல்லை வளர்க்காதீர்." என்றெல்லாம் பேசி அழைத்தனரே காங்கிரசார் அப்போதெல்லாம் தோன்றா மனமாற்றம் இப்போது அரும்பும், மலரும் என்று எதனாலே எண்ணுகிறார்'

எடுத்துரைக்கத் தெரியாமல், ஏமாந்தனரோ காங்கிரசார்!

இவர் எடுத்துக்கூறும் வகையால் எவர் மனமும் மாறிடுமோ! என்னே பெருந்துணிவு! ஏன் கொண்டார் இப்போக்கு!!

"இல்லையாமே, அண்ணா! இவர் கேட்பது தமிழ் நாடாம்; இன்றுள்ள நிலைமையிலே அதுதான் ஏற்புடைத்தாம். அது பெறவே முயலுவது அறிவுடைமை ஆகுமாம்." என்று கேட்டிடுவாய்; என் தம்பி! இதனைக் கேள்! நீ கூறும் முறையில் அல்ல நமைவிட்டுப் பிரிந்தார்கள் பேசு

வது; பிரிவினை தேவையில்லை—பிரியும் உரிமை மட்டும் பெறுவோம் என்று பேசுகின்றார்; முன்பகுதி கேட்டு, காங்கிரஸ் ஏடுகள் இடம் தரட்டும்; பின்பகுதி காட்டி, பெற்றிடுவோம் ஒரு கூட்டம் என்றன்றோ கொண்டுள்ளார்; புத்தம் புதுப்போக்கு

தம்பி! தமிழ்நாடு மட்டும் போதும்; அதுமட்டுமாகிலும் பிரிந்து தனிநாடு ஆகிவிடட்டும் என்ற கொள்கையினை, ஆதித்தனார் அளிக்கும் அறிவுரையால் கொள்கின்ரார் என்றே வைத்துக்கொள்வோம், வாத முறைக்காக. என்ன பலன் அதனால்? எவ்வகையில் உதவி செய்யும்?

திராவிடநாடு கேட்டால் மட்டும், வடவர் சீறுவர்; தமிழ்நாடு கேட்டால், வாரி வழங்குவரோ? கேள் கொடுக்கப்படும், தமிழ்நாடு—திராவிடநாடு அல்ல என்று நேரு பெருமகனார் செப்பினரோ, என்றேனும். அவருக்கு ஒரே நோக்கம்—பாரதம் ஒன்று என்பதே அவர் திட்டம் இந் நிலையில், திராவிடநாடு என்ற திட்டத்தைத் தமிழ்நாடு என்று மாற்றிக்கொள்வதனால், வந்திடும் வசதி என்ன? காரியம் எளிதாகும் என்பரேல், காட்டட்டும் காரணம்!!

இதனைத்தான் எழுதிக் கேட்கின்றார் ஏற்காடுதனில் இருந்து, தன்மான இயக்கம் கண்ட நாள் முதலாய் நம்மோடு இருந்துவரும் தகைமையாளர் — திருவொற்றியூர் சண்முகனார்.

மற்றொன்றும் கேட்கின்றார் நம் நண்பர்.

திராவிடநாடு கேட்கும்போது கொதித்து எழும் காங்கிரசார், தமிழ்நாடு என்று அளவைக் குறைத்துக் கொள்ளும்போது மகிழ்ச்சி கொள்கின்றனரோ? அங்ஙனமாயின், தமிழ்நாடு தனிநாடு ஆவதற்குக் காங்கிரசார் இசைவரோ? இசைவதாயின், பெறலாமே. பெற்று, காமராசரே முதலமைச்சராக வீற்றிருக்கலாமே'—என்று கூறுகின்றார். உண்மைதான் தம்பி! காங்கிரசார் என்னமோ, திராவிடநாடுதான் எட்டி, தமிழ்நாடு இனிப்பு என்று எண்ணுவதுபோலவும், ஆகவே, தமிழ்நாடு என்று நாம் திட்டத்தை மாற்றிக்கொண்டால், வெற்றி நிச்சயம் என்று கொள்வதுபோலவும் அன்றோ பேசுகின்றார்.

ஆனால் உண்மை என்னவென்றால், இன்று திராவிட நாடு கோரிக்கை வலிவுபெற்று வருகிறது இந்திய துணைக் கண்டத்துக்கு இது ஒரு பெரிய தலைவலியாகிப்போய் விட்டது; வெளிநாடுகளிலெல்லாம் 'திராவிடநாடு' கிளர்ச்சி பற்றியும் எழுச்சிபற்றியும் வெகுவாகப் பரவிவிட்டது; எனவே, முதலில் அதனைஉடைத்துவிடவேண்டும்; அதற்கு ஒரு ஊனம் ஏற்படுத்த ஒரே அடியாக, ஏக இந்திய'—பாரதம்—என்று பேசுவதுமட்டும் போதாது — திராவிடம் என்று எண்ணம் கொண்டோர்களிடத்திலேயே, ஒரு பேதத்தை, பிளவை மூட்டிவிட்டு திராவிடம் வேண்டாம், தமிழகம் போதும் என்று பேசவைத்து, அவ்விதம் பேசும் போதும் தமிழகத்தின் தொன்மை தனித் தன்மை; வடவரிடம் சிக்கியதால் வந்த சீரழிவு என்பன குறித்து அதிகம் பேசாமல், அந்தச் சீரழிவுக்குக் காரணமாக உள்ள டில்லி அரசின் போக்கைத் தாக்காமல், திராவிடம் என்று பேசுவோரைத் தாக்கியும், திராவிடநாடு எனும் திட்டத்தைக் கண்டித்தும், அந்தத் திட்டத்துக்குப் பேராதரவு பெற்றளித்த திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து ஏசியும் பூசலைக் கிளப்பியும், பகை கக்கியும் படிப்படியாகப் பிரிவினைக் கொள்கையையே அழித்து ஒழிப்பது என்பது, அவர்கள் திட்டம். எனவேதான்; தம்பி! திராவிடம் பகற்கனவு; திராவிட முன்னேற்றக் கழகம் கேவலமானவர்களின் கூடாரம்; சுயநலமிகள் கொட்டமடிக்கும் இடம்; அறிவிலிகளின் அரங்கம் என்ற இத்தகைய பேச்சுகளுக்கு, காங்கிரஸ் ஏடுகள் இத்தனை முன்னிடம்கொடுத்து உசுப்பிவிடுகின்றன. இது பழைய வித்தைதான்; இதிலே பழக்கமும் பயிற்சியும் அதிகம் இருப்பதால், அதனை மும்முரமாகச் செய்துவருகின்றனர். புதிய கட்சியினர், "இவ்வளவு எமது அறிவாற்றலைப் பாராட்டுகிறீர்களே, எமக்கு ஆதரவுகாட்டி, திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்குகிறீர்களே; நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும், திராவிடநாடு கூடாது என்பதுபற்றியும் பேசுவதை, சிந்தாமல் சிதைக்காமல், மெருகும் மிகக்கொடுத்து வெளியிடுகின்றீர்களே! அங்ஙனமாயின், ஐயன்மீர்! தமிழ்நாடு தமிழர்க்கு எனும் திட்டத்துக்கு ஆதரவு காட்டுவீரோ?" என்று கேட்பரேல், அந்த இதழினர், இடிஇடியெனச் சிரித்து, "என்ன மதியீனம்! எத்துணை ஏமாளி எண்ணம்! உமது பேச்சை எல்லாம் வெளியிட்டோம். எதற்காக? உமதுநிலை, உயர்வானது என்பதற்கா? ஐயோ! இதனையுமா, அறைந்திடவேண்டும் நாங்கள் ஓங்கிவளர்ந்து நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகமதை உருக்குலைத்து உடைத்துவிட, உம்மைக் கருவியெனக் கொண்டோம்; வேறென்ன? அவர் கேட்கும் திராவிடத்தை உடனிருந்து ஆதரித்த உம்மை உசுப்பிவிட்டு அதனையே தாக்கிக் களிப்புப் பெற்றோம். எந்தத் திருவாயால், ஏசினீரோ நேருதனை, அதே வாயிலிருந்து, அண்ணவாம் துரையாம், யார் இந்தஅறிஞன்! என்தந்தான் இப்பட்டம், எனக்கும் இவனுக்கும் உள்ள ஒட்டென்ன உறவென்ன!! —என்று முத்துகள் உதிர்ந்தனவே, அவைதாம் எமக்குத் தேவை, அவைதமை எடுத்தெடுத்து அழகழகாய்த் தொடுத்து, அனைவருக்கும் அளித்திட்டோம். அத்தோடு தீர்ந்ததய்யா; எமக்கு இருந்தஅரிப்பெல்லாம், அவ்வளவே, அறிந்திடுக! திராவிடம் தீது என்று தித்திக்கத் தித்திக்கப் பேசினீர், சுவைத்திட்டோம், அதுகண்டு நீர், புதுச்சரக்கு இதுகொள்க என்று; தமிழ்நாடு பிரிவினை என்று பேசுகின்றீர்—பேரறிவோ? திராவிடம் வேண்டாமென்று சொல்லுதற்கு உள்ள எல்லாக் காரணமும், நீர்கேட்கும் 'தமிழ்நாடு தனிநாடு' என்பதற்கும்தான் பொருந்தும், திராவிடநாடு பகற்கனவு என்றீர் — உமது 'தமிழ்நாடும்' அஃதேதான்!! ஏனோ இதனை நீவீர் அறிந்திடாது இருக்கின்றீர். விட்டிடுவீர் வீண்வேலை! விலைபோட்டுக்கூட வாங்கவேண்டாம்! கதராடை, புத்தம் புதிய ஆடை தருகின்றோம், புறப்படுவீர். பொன்அவிர் மேனியான், இந்தப் புவிக்குள்ள தலைவர்களுள், மாணிக்கம்போன்ற மதிப்புடையான்; மாமேதை நேருவிடம் மண்டியிட்டுச் சேவைசெய்ய!!"—என்றல்லவோ கூறுவார்கள், இஃது அவர்களை இன்று பயன்படுத்திக்கொள்பவர்களுக்கும் மிக நன்றாகத் தெரியுமே! ஊரறிந்த இரகசியமல்லவோ இது.

தம்பி! நினைவிலிருக்கிறதா, சில ஆண்டுகளுக்கு முன்பு, ம. பொ. சி. அவர்கள், திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு நடத்திவந்த காதை! ஊருருக்கும்!! நாட்டுப் பிரிவினையை எதிர்க்க, தடுக்க, ஏக இந்தியா எனும் கொள்கையைக் கடைப்பிடிக்கும் காங்கிரசுக்கு இல்லாத

பலமும் வசதியும், ம. பொ. சி. அவர்களுக்கு உண்டா? இல்லை! என்றாலும், அவர் கிளம்பினர், கண்டோமே! திராவிடம் என்ற சொல்லாராய்ச்சியிலிருந்து தொடங்கி, கழகத் தோழர்களுக்கு (விலகியவர்களும் இங்கு இருந்த போதுதான்!) 'விசில் அடிச்சான் குஞ்சுகள்' என்ற விஜோ துப்பட்டம்சூட்டும் வரையில் பேசினர். ஏன் செய்தார் அந்த எதிர்ப்பு? தார்கொண்டு இந்தி எழுத்துக்களை அழித்த போது மண்ணெண்ணெய் ஊற்றி, தாரைக் கழுவிடத் தமது கழகத் தோழரை அனுப்பிவைத்தார். வடநாட்டுக் கடைகள் முன் பெரியாரின் தொண்டர்கள் மறியல்செய்த போது, இவரது கழகத் தொண்டர்கள் எதிர் மறியல் நடத்தினர். இவைகளுக்கு, இன்று விலகியோர் பெறுகின்ற அளவிலும் வகையிலும், விளம்பரம், காங்கிரஸ் ஏடுகளில் வெளிவந்தன, அறிவாயல்லவா? ம. பொ. சி,யின் தேச பக்தி, இலக்கிய மேதாவித்தனம் ஆகியவைகளைப் பாராட்டினர், காங்கிரஸ் தலைவர்கள். அவருடைய அறிவுரை கேட்டாகிலும், திராவிடமாயையிலிருந்து விடுபடுங்கள் என்று கூறினர் அவர் நடத்திய மாநாடுகளில், காங்கிரஸ் தலைவர்கள் கலந்துகொண்டனர். காமராஜரே, சென்னையில் ஒரு மாநாட்டிலே, நடுநாயகமாக அமர்ந்திருந்தார். இதெல்லாம், ம. பொ. சி,க்கு அவர்கள் காட்டிய மதிப்பு; ம. பொ. சி. அவர்களின் பேரறிவை அவர்கள் போற்றுவதற்கான சான்று. என்று கொள்வர்! ஏவிவிட, தக்க சமயம்! பயனபடுத்திக்கொள்வோம், என்பதன்றி வேறென்ன.

சில நாட்களுக்கு முன்பு, அமைச்சர் பக்தவத்சலம், தூக்கி எறிந்தாரே, இதே, ம பொ. சி. அவர்களை. நாங்கள் ஒன்றும் இவருடைய கிளர்ச்சி கண்டு நடுநடுங்கி, தமிழ் நாடு என்று பெயர் மாற்றிடவில்லை; நாங்கள் ஏற்கனவே முடிவு செய்திருந்தோம்; அவருக்கே அது தெரியும்; அதன் படியே நாங்கள் நடந்துகொண்டோம்'' என்று. மதிப்பளிக்க மறுத்தாரே! ஈதனல்லவா, மாநகராட்சி நடாத்திய விழாவொன்றில்; ம. பொ சி.யைப் பாராட்டி, நன்றி கூறினேன். நண்பருக்கு இப்போது, என் பாராட்டுதல் தேவைப்படாமல் இருக்கக்கூடும்; ஒரே இடத்திலிருந்து பாராட்டுரைகள் கிடைப்பதைவிட, புதுப்புது இடமிருந்து வருவது, சுவையாகத்தான் இருக்கும். அதற்கல்ல, நான் கூறுவது. திராவிட இயக்க எதிர்ப்பு நடத்துவோர் எவராயினும், அவருக்கு ஆதரவு அளித்து, தூக்கிவிட்டு, வேலை வாங்குவது, காங்கிரசுக்கு நீண்ட நாள் பழக்கம் என்பதை விளக்கத்தான். அந்த முறைப்படி இப்போது, 'விலகினோர்க்கு' வீரகண்டாமணி கிடைக்கிறது, வேறென்ன!! இதைப்பெறுவதற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்தை இவர்கள் கண்டித்துத் தீரவேண்டும், வேறென்ன செய்கிறார்கள். தமிழ்நாடுதான் பெறவேண்டும் என்பதற்கா தமது பேச்சில் முதலிடம் கொடுக்கிறார்கள்! கொடுப்பதாயின், தமிழ்நாடு தனிநாடாக இல்லாதிருக்கும் தன்மை, அதனால் ஏற்படும் இழிவுகள் இன்னல்கள், சுரண்டல், அந்தச் சுரண்டலால் வடநாடு கொழுத்து வரும பயங்கரமான உண்மை, இவைபற்றி அல்லவா பேச்சு, விறுவிறுப்பாக, வீரம் கொப்பளிப்பதாக அமையும், எங்கிருந்து வரப்போகிறது அந்த எண்ணம்! அது தான் சொல்லிவிட்டார்களே,

> வடநாடு நரகமுமல்ல. வடநாட்டுக்காரர் யமகிங்கரருமல்ல.
>
> வடநாட்டோடு ஒட்டி வாழலாம்.
>
> வடநாட்டு முதலாளியும் இங்கு வந்து தொழில் நடத்தலாம்.

என்று. இது போதாதா, இவர்களைப் பொட்டிட்டு, ஆலத்தி எடுத்து, 'ஐஞ்சும்மூணும் அடுக்காய்க்கொடுத்து, பாராட்ட, போற்ற, வாழ்த்த! கசக்கிறதா அந்த ஏடுகளுக்கு, எந்த மாவீரன் வடநாட்டானிடம் சிக்கிக்கொண்டிருக்கிற வரையில் திராவிடன் தலைதூக்கமுடியாது என்ற முழக்கமிட்டாரோ; அவரே முன்வந்து, அதே முழக்க மொழியில்,

> வடநாட்டு முதலாளி இங்கு வந்து தொழில் நடத்தலாம்

என்று கூறுவதை, கொட்டை எழுத்தில் வெளியிட; குதூகலம்கொள்ள!! புண்ணிய க்ஷேத்திரங்களிலே உள்ள பண்டாக்கள், தம்மை நாடிவருவோர் எழுதிக்கொடுக்கும் நற்சான்றுகளைப் படித்துப்படித்து மகிழ்வதைப்போலல்லவா, அவர்கள், வடநாட்டு எதிர்ப்புணர்ச்சியை, வரிந்து கட்டிக்கொண்டு ஊட்டிவந்தவர், வாயார மனமார, வாழ்க வடநாடு! என்று கூறும் முறையில் பேசுவது கேட்டு மகிழ்ந்து, தமது இதழ்களிலே வெளியிட்டு அதனைத் திரும்பத்திரும்பப் படித்துப் பார்த்து மகிழ்ச்சி கொள்வார்கள்.

பக்ரா-நங்கல் நிர்வாக ஊழல்.

சிந்திரி தொழிற்சாலையில் காணப்பட்ட சீரழிவு.

வெளிநாட்டுக் கடன் சுமை அதிகமாகி அழுத்துவது.

ஏற்றுமதிகுறைந்து, இருப்புத்தேய்வது.

நோட்டுப் பெருக்கத்தால், பணவீக்கம் ஏற்பட்டிருப்பது,

மறைமுக வரிகளினால் ஏழை மக்கள் துயர் அடைவது.

வருமான வரி ஏய்க்கும் வன்கணாளரை விட்டு வைக்கும் கொடுமை.

முந்திரா போன்றோர்தரும்பணம்பெற்றுத் தேர்தல் நிதி குவிக்கும் கேவலத் தன்மை.

எல்லையில் இடம் பிடித்த சீனரிடம், ஏதும் செய்ய இயலாமல், நேரு திண்டாடித் திணறுவது.

கரடியாய்க் கத்தினாலும் சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைக்காத கன்னெஞ்சப்போக்கு.

சேதுசமுத்திர திட்டமும், தூத்துக்குடித் துறைமுகத் திட்டமும் இன்னமும் ஏட்டளவில் இருந்து வரும், உள்ளம் வாட்டிடும், நிலைமை.

ஒவ்வொரு துறையிலும் ஊழல் அடுக்கடுக்காய் இருப்பதனை, கணக்கு ஆய்வாளர் காட்டி வரும், கொடுமைமிகு சீர்கேடு.

கொடுமைக்கு ஆளான இலங்கைத் தமிழரின் குரல் கேட்டு உதவி புரிய முன் வராது நேரு பெருமகனார் உள்ள போக்கு.

திட்டங்கள் அத்தனையும் வடக்கையே வளப்படுத்தும் போக்கு.

மூன்றும் திட்டத்திலும் முகத்தில் கரி பூசப்பட்ட கேவலம்.

எதற்கு எடுத்தாலும் டில்லுக்கு எடுக்கும் காவடி. சிந்து.

இவைபோல அடுக்கடுக்காய் எத்தனையோ. உண்டன்றோ! எடுத்தியம்பக் கேட்டீரோ இவைபற்றி எல்லாம்! இல்லை! ஏன் இல்லை? பேசுவரேல், கூசாமல் இன்று இடங்கொடுக்கும் ஏடுகளின் நேசமும்முறிந்துவிடும்; இருட்டடிப்புப் பின் தொடரும்!! எனவே, விலகியோர், இவைபற்றிய பேச்சை, கட்டி வைத்துவிட்டார் மூட்டை! இப்போது இருப்பதெல்லாம் என்னை இழிவு செய்யும் திருவாய் மொழி—அதற்கே இடம் உண்டு, அந்த இதழ்களிலெல்லாம், வேறு, சட்டத்திலே உள்ள சத்தற்ற நிலைமைகளை மெத்தச் சிரமப்பட்டுப் படித்துப் பொருள் அறிந்து, இத்தனை தொல்லை நமக்கு இருப்பதனால், தமிழ்நாடு தனியே இயங்க ஒரு தன்மான முயற்சி வேண்டும், என்று பேசத் தொடங்குவரேல், அவன் போனான்—இவர் வந்தார்! அடைத்திடு கதவை என்று அன்றே கட்டளை பிறக்கும்.

மாற்றார் மனம் மகிழ நடந்துதான் வாழ்ந்திட இயலும் என்ற நிலை பிறந்துவிட்டால், பெற்றுவிட்டால், இடையே நின்று ஒரு திருத்தம் பெறவும் இயலாது. மணல்மேடு ஏறி நின்றார், கால் இடறிப்போமானால், எங்கு வந்து வீழ்வார்? எவரறியார் இந்த நிலை? எனவே வேகமாய் இவர்கள் 'இந்தியர்' ஆகியே தீரவேண்டும்; வேறு வழியில்லை; வேறில்லை முறைகூட.

இவர்கள் இதுபோல்தான், இப்போதே என்று, வடக்கே உள்ள சில ஏடுகள், வரைந்திருக்கக் கண்டேன். இங்கு தமிழரிடை இப்போதே, இந்தியராகுங்கள் என்று இயம்பச் சிறிது கூச்சம் இருக்குமன்றோ! திராவிடர் வேண்டாமென்று, தமிழர் என்ற நிலைகொண்டு, மெள்ள மெள்ள இந்தியராதல் ஒன்றே இவர்க்கு இனி எதிர்காலம்.

வடக்கே வெளியாகும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழ் நிருபர், பேட்டி கண்டாராம். புதியவரை! பெற்றாராம் அவர் கருத்தை, வெளியிட்டிருக்கின்றார்; படித்தேன்; பதைபதைத்தேன்.

பொதுஉடைமையர் போன்றோ சமதர்ம வாதிபோன்றோ; புரட்சிப் போக்கினர் அல்ல, நாங்கள்.

எந்த (சமதர்ம) தத்துவமும் பிடித்தலையும் போக்கில்லை, எமக்கு:

தமிழ்நாடு தனிநாடு ஆகவேண்டும் என்ற ஆர்வமும் எமக்கு இல்லை.

என்றுரைத்தாராம், புதிய கட்சியின் தலைவரவர். வெளி வந்து இருகிழமை ஆகிறது; இதுவரையில், மறுப்பும் வரவில்லை. என் சொல்ல! கைப்புண் காணக் கண்ணாடியா வேண்டும்! உள்ளம் இருப்பது, வடக்கே உள்ள இதழில் வந்தது; மெள்ளமெள்ள இங்கும் அதனை எடுத்துரைக்கப் போகின்றார்; உடன் இருப்போரில் ஏழெட்டுப் பேர்கள், இலட்சியம் போற்றிடுவோர்! எங்கே அவர் கோபம் எழுந்திடுமோ, என்ற அச்சம். இல்லையெனில் இப்போதே இயம்பிடுவார் ஜெய்இந்தும்! முன்பே இதை உணர்ந்து, மொழிந்தது 'மெயில்' இதழும், திராவிடப் பிரிவினையை உதறினார்; தக்கசெயல்; எனினும் இஃதேனோ, தமிழ்நாடு என்ற ஒரு தத்துவம் பேசுகிறார்; அதற்குப் பொருள் இல்லை; ஆகப்போவதுமில்லை; உடனடியாய்அனைத்தையும் உதறிட அஞ்சி ஒரு பொருளற்ற திட்டத்தைக் காட்டுகிறார் தோழர்கட்கு; சின்னாட்கள் சென்றதும், இதனையும் போட்டிடுவார் மண்மீது — என்றெல்லாம். அதற்கும் மறுப்பு இல்லை. அச்சம்!

அறிவீர், ஐயன்மீர்! இந்தியா என்பதுபோலி, சூது, சூழ்ச்சி, ஒரு சுறண்டல் யந்திரம்; இதுவே, என் கருத்து

தமிழர், தனி இனம்—தாழ்ந்த நிலையினில் இன்றுளர்—அதற்குக் காரணம்வடவர்.

வடவர் வாழ்ந்திட வழி வகுத்ததுதான், இந்திய அரசியல் சட்டமெனும் பொறி.

இதில் சிக்கி இருக்கு மட்டும், தலைநிமிர்ந்து வாழ்ந்திடான் தமிழன் எனும் இனத்தான்.

அவன் மானம் அழிக்கின்றார், மொழியைப் பழிக்கின்றார்; வாழ்க்கை வழியை அடைக்கின்றார்.

வளமெல்லாம் வடக்கேதான்; வாட்டம்தான் தமிழர்க்கு; இந்தியா என்பதிலே இதுவும் ஓர் இடம் என்று இயம்புமட்டும், தன்மானமும் இல்லை, தழைத்திடப் போவதில்லை.

வடநாட்டு ஆதிக்கம், அழித்திடவே, இருக்கின்றேன்; வந்திடுவீர் என்னோடு; தனி அரசு காண்பதற்கே!!

என்று இவ்விதமெல்லாம், எடுத்துரைக்க முன்வந்தால், ஏது ஏடுகளிலே இடம்!! எனவேதான், அவை இன்று, வெளியே, காணோம். அம்மட்டோ, தம்பி! திராவிடம் என்றால் கசப்பு — ஆயின், வடநாடு எனின், இனிப்பேயன்றோ, காண்கின்றனர்,

எனவே தம்பி! எனைவிட்டுப்பிரிந்தனரே, என்செய்வேன் என்று எந்தன் மனம் பட்டபாடு மிக அதிகம் என்றாலும், இவர், நமது இன்னுயிராம் இலட்சியத்தையே, மறந்து, 'இந்தியர்' ஆகின்றார், என்பது புரிவதனால், துக்கம் தனையே நான் தூக்கி ஓர்பக்கம் தொலைவாக வைத்துவிட்டு, திராவிடநாடு பெற, தக்கவர்கள் பல இலட்சம், அன்றுபோல் இன்றும், ஆற்றலோடு இருப்பதனை, கண்டு அகமகிழ்ந்து, புத்தார்வம் கொள்கின்றேன். எங்கும், நம் தோழர்கள், புரிந்துகொண்டார், நிலைமையினை; என்னை விட விரைவாக, என் நெஞ்சா அவர் நெஞ்சம்!!

அண்ணன்,

அண்ணாதுரை

என் வேண்டுகோள்

நமது கழகத்தில், சில காலமாக ஏற்பட்டுவிட்ட கசப்புணர்ச்சி எனக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கத்தக்க விதமான பிளவு எனும் வடிவமெடுத்து, எழிலுடனும் ஏற்றத்துடனும் வளர்ந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகம் மாற்றாரின் ஏச்சுப் பேச்சுக்கு ஆளாகவேண்டிய நிலையை உண்டாக்கிற்று

கழகத்தின் கொள்கை, தலைமை ஆகியவற்றில் நம்பிக்கைகொண்டு ஆர்வத்துடனும், தன்னல மறுப்புடனும் பணியாற்றுவோர் இலட்சக்கணக்கில் உள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஏற்பட்ட கசப்புணர்ச்சி, பிளவு எனும் வடிவம் கொண்டதுகண்ட பொது மக்களில் மிகப் பெரும்பாலோர், இந்நிலை குறித்து வருத்தப்படுவதுடன், முன்னிலும் அதிகமான ஆர்வத்துடனும், அளவிலும் ஆதரவு நல்கி, கழகத்தை மேலும் செம்மையுள்ள நிலைக்குக் கொண்டுசெல்லவேண்டும் என்ற உறுதி காட்டி வருகின்றனர்.

பிளவு ஏற்பட்டதைப் புதிய கட்சியாக்கிக்கொண்டவர்கள், தமதுபோக்கு கழகத்தவரில் மிகமிகக் குறைவான எண்ணிக்கை கொண்டவர்களிடை மட்டுமே சபலத்தை ஏற்படுத்த முடிந்தது என்பதை உணர்ந்து, எரிச்சல் கொள்வதும் ஏமாற்றம் அடைவதும் இயல்புதான்.

அதுபோலவே, துவக்கமுதல் இது நாள் வரையில், மாற்றாருக்குத் துளியும் இடம்தராத முறையில் கட்டுக்கோப்பாக இருந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகத்திலே, வெடிப்பும் பிளவும் ஏற்பட இடம் கொடுத்துவிட்டார்களே என்பதால், அப்படிப்பட்டவர்கள்மீது அருவருப்பும் கோபமும், இன்றும் கழகக் கொள்கை, தலைமை ஆகியவற்றிலே நம்பிக்கைகொண்ட இலட்சக்கணக்கானவர்களுக்கு இருந்து வருகிறது.

இந்த இரு உணர்ச்சிகளின் மோதுதல் இன்று, அருவருக்கத்தக்க, எவரும் அனுமதிக்க முடியாத, பொதுவாழ்வுத் துறையையே கேவலமாக்கிவிடத்தக்க, சின்னத்தனமான சம்பவங்களுக்கு இடம் கொடுத்துவிடுவது கண்டு, நான் பெரிதும் கலக்கமும் வேதனையும் அடைகிறேன்; அவமானமும் கொள்கிறேன்.

அவரவர்களுக்கு உள்ள உணர்ச்சிகளுக்கு ஏற்ப, அவர்கள் நம்புகிற கொள்கைக்காக ஆர்வத்துடன் தீவிரமாகப் பணியாற்றி, தாம் நம்புகிற — ஈடுபட்டிருக்கிற அமைப்பைத்தான் உலகம் மதிக்கிறது என்பதை நிலைநாட்ட வேண்டுமேயன்றி, தமக்கு இருக்கிற நம்பிக்கையை ஏற்க மறுக்கும் சிலரை ஏசுவதும், தகாத முறைகளில் வெறுப்புணர்ச்சிகளைக் காட்டுவதும், என்னால் சகித்துக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

கலாம் விளைவித்தல், கல் வீசுதல், கூட்டத்தில் குழப்பம், காலணி வீசுதல் போன்ற காட்டுமிராண்டித்தனம்— நாம் துவக்க முதற்கொண்டுள்ள தூய்மையான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவைகளைக் கேலிக்கூத்து ஆக்கிவிடும் சிறுமைச் செயல்களாகும்.

தனித்தனியாகச் சம்பவங்களை எடுத்து ஆராய்ந்து பார்த்துப் பேச முற்படவில்லை. பொதுவாக இந்த நிலைமை, எத்துணை கேவலமானது என்பதையும், இதன் காரணமாக நமது கழகத்தின் மாண்பு எந்த அளவுக்குக் கெட்டுவிடும் என்பதையும் எடுத்துக்காட்டி, இனி எவரும் இத்தகைய இழி செயலுக்கு இடமளித்து, என் இதயத்தில் ஈட்டி எறியாதீர்கள் என்று இறைஞ்சிக் கேட்டுக்கொள்ளவே இதனை எழுதுகிறேன்.

மனம்போன போக்கிலே மற்றவர்கள் பேசவும் எழுதவும் அதனைக் கண்டு மனம் பதறாமல் பணியாற்றிவருவதுமே, தூய தொண்டுக்கு அடையாளம்.

கோபத்தால் கொந்தளிப்பது, கசப்புணர்ச்சியால் கல் வீசுவது என்பவைகளில் எவர் ஈடுபடினும், அவர்கள், தம்மையும் அறியாமல், தாம்வளர்த்த கழகத்துக்குத் தாமே இழிவையும், பழியையும் தேடித் தருகிறார்கள் என்பது தான் பொருள்.

துவக்கமுதல், தூற்றல்களையும், தொல்லைகளையும், இழி மொழிகளையும், பழிச்சொற்களையும் தாங்கிக்கொண்டவர்கள், திருப்பி அதேமுறையில் நடந்திடாமல், கண்ணியத்தோடு காரியமாற்றிக் கழகத்தை வளர்த்துவருபவர்கள் என்ற நற்பெயர், நமக்கு உயிரூட்டம் தந்து வந்திருக்கிறது என்பதை எவரும் மறந்திடலாகாது.

இன்றைய நிலையிலும், நம்மீது வீசப்படும் ஏச்சும் பேச்சும், பழைய குப்பைகளின் மறு பதிப்பு—மலிவுப் பதிப்பு என்பதன்றி வேறில்லை. முன்பு வீசப்பட்டவைகளாலே நாம் எப்படித் துளியும் பாதிக்கப்படாமல், இன்றைய எழில் வடிவம் பெற்றுத் திகழ்கிறோமோ, அதே போலத்தான் இப்போது நமது கழகத்தின்மீது வீசப்படும் இழிமொழிகளும். நமது கழகத்தை இம்மி அளவும் பாதிக்காது; வளர்ச்சியைத் தடுக்காது; வெற்றியைப் பறித்துக் கொள்ளாது

இந்தத் திடநம்பிக்கை உங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இருக்கவேண்டும்; இருந்திடின், அமைதியான முறையில் எவரும் அருவருக்காத தன்மையில், ஆர்வத்தோடு பணியாற்றி, வெற்றிபெற்றளிக்க முடியும்.

கழகத்துக்கு எத்தனை புதிய உறுப்பினர்களைச் சேர்த்தோம்—புதிய கிளைகள் அமைத்தோம்—என்ற கணக்குத்தான், நீங்கள் பெற்றளித்துப் பெருமையும் பெருமகிழ்ச்சியும் பெறவேண்டியதாகுமேயன்றி, வீசிய கற்கள்; செருப்புகள் என்று மாற்றார் காட்டும் கணக்கு, நமக்குத் தலை இறக்கத்தைத்தான் தரத்தக்கதாகும் என்பதை உணர வேண்டும்.

பொறுப்புள்ள எவரும் அத்தகைய செயல்களில் ஈடுபடமாட்டார்கள் என்பது உண்மைதான் என்றாலும், பொறுப்புள்ள எவரும் அத்தகைய சிறு செயலில் ஈடுபடுபவர்களைக் கண்டறிந்து தடுத்திட, கண்டித்திட, களைந்திட முற்படுவதைத் தமது கடமை என்று கொண்டாகவேண்டும் என்பதை மறந்துவிடக்கூடாது.

கைகூப்பி, காலில் விழுந்தாகிலும், காலித்தனம் செய்வோரை, இந்தச் சிறு செயலில் ஈடுபடாதீர்கள்; செம்மையாக வளர்ந்துவரும் தி, மு. கழகத்துக்கு இழுக்குத் தேடாதீர்கள்' – என்று வேண்டிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அத்தகைய செயலில் ஈடுபடுவோரைக் கழகம் நிச்சயமாக உறுப்பினராகக் கொள்ளாது.

அத்தகைய செயல்களில் ஈடுபடுவோரை, என் தோழர்கள் என்று நான் எப்படிக் கூறிக்கொள்ள முடியும்?

அத்தகைய செயலில் ஈடுபடுவோரை பொது நலத் தொண்டர்கள் என்று எவர்தான் ஏற்றுக் கொள்வர்?

எனவே, காரணம் ஆயிரம் காட்டமுடியும்! எனினும், எவரும் எந்தவிதமான காலித்தனத்திலும் ஈடுபடுவது ஆகாது: அதுதான் அவர்தம் முறை—அவ்வளவுதான் அவர்தம் திறம்—அந்த அளவுக்குத்தான் அவர்களுக்கு என்னிடம் உள்ள பற்று, நம்பிக்கை, அன்பு என்றால்,

அப்படிப்பட்டவர்கள் கழகத்தில் இருப்பதை, நான் என் இதயத்தில் எறியப்படும் ஈட்டி என எண்ணுமல், வேறு எப்படிக் கருதமுடியும்?

கல்லோ, சுடுசொல்லோ, செருப்போ, மறுப்போ—எதனை எவர் வீசினுலும், அவை என்மீது வீசப்பட்டதாகவே நான் கொள்கிறேன்! எனக்கு, கேவலத்தைக் கஷ்டப்பட்டுத் தேடிக்கொடுக்கும் சிறுமைச் செயலாகவே கருதுகிறேன்.

எனவே, இறைஞ்சுகிறேன்—கோபம், கொந்தளிப்பு, அருவருப்பு, மனக்கசப்பு அகற்றுமின்! இழிசெயலில் ஈடுபடாது, கழகத்தின் ஏற்றம் வளர உழைத்திடுமின்! எவர் குறை அறிவு காரணமாகவோ ஆத்திர உணர்ச்சி காரணமாகவோ அத்தகைய செயலில் ஈடுபடக் காணினும், உடனடியாக அவர்தம் தாள்பற்றி வேண்டித் தடுத்திடுமின்! மறுப்பரேல், கழகத்தைவிட்டு விலகிவிடக் கட்டளையிட வேண்டுகிறேன்.

மிகப் பெரிய எதிர்காலம் நம்மை அழைக்கிறது; அருமைமிகு அமைப்புக்கு நாம் உரிமையாளர்கள்! அரும் பணியாற்றுவோர் எனும் புகழாரம் கொண்டுள்ளோம்; வந்த எதிர்ப்புக்களெல்லாம் மண்ணுகிப் போய்விட்டன; இன்று இருப்பது எதிர்ப்பு என்றுகூடக் கூறத்தக்க நிலேயோ, தரமோ கொண்டது அல்ல இந்நிலேயில் அல்லவா நாம் அமைதியும் அடக்கமும், பொறுப்புணர்ச்சியும் கொண்டோராக நடந்துகொள்ளவேண்டும்.

கட்டுப்பாடான முறையில், மாற்றுரின் சில இதழ்கள், தமது கழகத்துக்கு மாசு கற்பிக்க முற்பட்டிருக்கும் வேளே இது.

எல்லாம் சரிதான்; இந்தக் கழகம், கல் போடலாமா—செருப்பு வீசலாமா—என்று பிறர் கேட்கவேண்டும் என்பதற்காகவே, சிறிய சம்பவங்களேயும் பெரிதாக்கிக் காட்டச் சில ஏடுகள் காத்துக்கிடக்கும் காலம்.

இந்த நிலே உணர்ந்த பொறுப்புமிக்கவர்கள், கழகக் காரியங்களில், முன்பு காணப்பட்டதைவிடக் கண்ணியம் பளிச்செனத் தெரிந்திடச் செய்யவேண்டும். கழகம் கட்டளேயிடுகிறது—கண்ணியம் காத்திடுமின்.

தூற்றித்திரிவதை — தொல்லேகள் தருவதை—திரித்துக் கூறுவதை—இழிமொழியால் ஏசுவதை, நமது மாற்ருர்கள் ஏகபோக உரிமையாகக் கொள்ளட்டும்.

தாங்கிக்கொள்வது — தளராது இருப்பது — கலாம் தவிர்ப்பது—கண்ணியம் காப்பது—இவை நமக்கு உரியனவாக என்றென்றும் இருக்கட்டும்.

இம்முறைதான் நன்னெறி—என் நெறி.

இம்முறைதான் கழகத்துக்கு வெற்றி தரும்.

இம்முறை நடப்போரே—'கழகத்தவர்' எனும் பெயருக்கு உரியவர்.

இந்த உரிமை பெற்றவரே—என் தம்பியும் ஆவர்.

எனக்கு உள்ள ஒரே செல்வம்—ஒரே பெருமை—'என் தம்பியர் தகாத செயலில் ஈடுபடமாட்டார்கள்' என்று உள்ள நிலேமைதான்.

அதைப் பாழாக்க எவர் முற்படினும், அவர் என்னேத்தான் இழிவுபடுத்துகிருர்—தலேகுனிய வைக்கிருர்-தாக்குகிருர்—வேதனேப்பட வைக்கிருர் என்று பொருள்.

இதனே நன்கு உணர்ந்து நடந்திடும் பொறுப்பினே அனேவரும் மேற்கொள்ள வேண்டுகிறேன்.

அண்ணுதுரை.

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஞர் அவர். அரையணுவுக்கு மண்ணெண்ணெய். ஏழரையணுவுக்கு நான்கு உயிர்களின் பட்டினியைப் போக்குதற்கான உண்பண்டங்கள்.

அடுத்த நாள் புயல் அலுவலகத்திற் கார்வண்ணன் இருந்தார்.

"வீட்டுக்காரருக்கு ஒருமாத வாடகையை முன்பணமாகக் கொடுக்காமலே குடிவந்துவிட்டோம். இன்று எப்படியாவது பணத்தைக் கொடுத்தாகவேண்டும். இல்லாவிட்டால் அவமானமாகிவிடும். முதலில் அதற்கு வழி செய்யுங்கள்!"

படபடப்போடு கூறினர் செம்பொன்னன்.

"என்னய்யா இது! என்னமோ கதையளக்கிறீர்!"

நிமிர்ந்து பார்த்தார் செம்பொன்னன். அவரால் நம்ப முடியவில்லே.

"நேற்றுச் சொன்னீர்களே, 'வீட்டுக்கு முன் பணம் நானே தருகிறேன். வேலேயையும் உடனே ஒப்புக் கொள்ளுங்கள்' என்று. உங்களே நம்பித்தானே நான் இங்கே குடியே வந்துள்ளேன்!"

"ஏய்யா, உபசாரத்துக்குச்சொன்னதை எல்லாம் உண்மையாக எடுத்துக்கலாமா?—ஒன்றுமே தெரியாத மனிதரா இருக்கிறீரே நீர்!"

"அப்படியானல் இங்கே வேலே கொடுப்பதாகச் சொன்னது பொய்! வீட்டுக்கு முன் பணம் நீங்களே தருவதாக அடித்துச் சொன்னதும் பொய்!"

"யோவ், இதிலே என்ன பொய் கெடக்குது, பொய்! நீ சொல்றது தான் பழகிப்போன பொய்!-ஏதோ; நீ கேட்டே! என்னமோ நான் சொன்னேன்—உபசாரத்துக்கு."

"அநியாயம் சார்! இது பெரிய அநியாயம்!"

"போய்யா, போ! சமயா சந்தர்ப்பம் தெரியாத ஆளு நீ! எப்போ, எப்போ, எதை எதை, எப்புடி, எப்புடி மாத்தணுமோ அப்புடிஅப்புடி மாத்தணும். இது தெரியாமே...... உம் உம்! போ, போ. வழியைப் பாரு! எனக்கு வேலே இருக்குது, வேறே வேலே!"

என்னபேசுவார் செம்பொன்னன்! செய்வறியாது திக்கு முக்காடிக் கொண்டு வெளியே வந்தார் அவர்.

"அயோக்கியப் பய! இரக்கப்பட்டுச் சொன்னு‌னும் இரக்கப்பட்டு! ஒருமாத வேலே வாங்கிக்கிட்டான், சம்பளம் கேக்கப்போனு, சம்பளமும் கிடையாது; வேலேயும் கிடையாதுன்னு வெளியே புடிச்சித்தள்ருன். 'ஏண்டா வேலேக்குச் சேத்துக்கினே'ன்னு, சும்மாங்காட்டியும் சேத்துக்கினுனும். இவனுவ எல்லாம் பெரிய மனுசனுவ!—டேய் பெரிய மனுசா, எம்மாங் காலத்துக்குடா இந்தத் தலேப்பா மாத்தி வேலே நிலேக்கும்!"

'யார் அப்படிக் கூச்சல்போடுவது?'

ஓகோ, நேற்றுவரை 'புயல்' அலுவலகப் பையனுகப் பணியாற்றிய அந்த இளேஞனு?' பாவம் சின்னஞ்சிறு புழுவொன்று சுயநல வெறி கொண்டுவிட்ட கொடிய உள்ளத்தானுக்கெதிரே தன் ஆற்றலேக் காட்டுகிறது— ஆத்திரத்தைக் கொட்டுகிறது. காட்டி, கொட்டி என்ன பயன்?

அந்தப்புழு மேலும் நசுக்கப்பட்டு உருத்தெரியாமற்போகும் காட்சியை வேடிக்கை பார்க்கச் செம்பொன்னனல் முடியாது. அதோ அவர் விரைகிருர் தன் குடும்பத்தின் அன்றைய பட்டினியைப் போக்குதற்கு வேறு வழி தேடிக்கொண்டு.

★

தீயும் தென்றலும்

டி.கே.சீனிவாசன்

"பத்மா! எடுத்த எடுப்பிலேயே என்னை இழிந்தவள் என்று எடை போட்டுவிட்டாய். பெண்களுடைய இடைதான் உடலின் பாரத்தைத் தாங்கமுடியாது ஒடிந்து போகும் அளவில் இருக்கிறது என்று கவிஞர்கள் வர்ணிப்பார்கள். என்னைப்போன்ற துர்ப்பாக்கியவாதிகளின் இதயங்கள்கூட ஏற்கிற அளவுக்குமேல் இன்னலை ஏற்றிக்கொண்டு இற்றுவிழுகிற நிலையில் திண்டாடுகின்றன. தரங்கெட்டவள் என்று உன்னாலே மதிக்கப்படும் உன் தோழி, தாங்கமுடியாத வேதனையால் தவித்துக்கொண்டிருக்கிறாள் என்பதை நீ அறியமாட்டாய். "வெட்கங்கெட்டவள்" என்று விலாசமிடப்பட்டுவிடக் கூடாதே என்ற அச்சத்தால் எதையும் வெளிப்படுத்த என்னால் முடியவில்லை."

"நானாகக் கருகவில்லை; யாரோ கசக்கிவிட்டார்கள்" என்று எந்த மலராவது விளக்கங் கூறினால், அதை ஏற்றுக்கொண்டு எவரும் அதைப் போற்றுவதில்லை. உதிர்ந்த சருகுகளோடு ஒன்றாக அதையும் சேர்த்து ஒதுக்கிவிடுவார்கள். ஆனால்...விவேகத்துக்கு முதலிடங் கொடுக்காத இந்த உலகத்தில், ஒருசில விதிவிலக்குகள் இருக்கத்தான் செய்கின்றன. மலர் கசங்கினாலும், காய்ந்தே போனாலும் அதைக் குப்பையில் போட அவர்களுக்கு மனம் வராது. உலகத்தை மதித்து நடக்கவேண்டும் என்று நினைப்பவர்களுக்கு உதவாக்கரைகளாகத் தோன்றும் எத்தனையோ பொருள்கள், மனித உள்ளத்தை உணர்ந்து மதிப்பவர்களுக்கு உயர்ந்தவையாகத் தோன்றும். தோழி! உன்னை நான் இந்த வரிசையிலே இருப்பவளாகத்தான் எப்போதும் மதித்திருக்கிறேன்.

"என்னோடு எப்போதும் நீ இணைந்து பழகினாய். நானே உன்னை ஏறெடுத்துப் பார்க்கவேண்டிய நிலையில்தான் உயர்த்தி உறவாடினேன். பண்பு என்ற அந்தச் சொல்லின் முழு விளக்கத்தை உன்னோடு பழகியதால்தான் என்னால் உணர முடிந்தது. எல்லாப் பெண்களுக்கும் ஒரே மாதிரியான வரையறைகள்தாம் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒருசில பெற்றோர்தாம், எப்படி அந்த எல்லைக் கோட்டுக்குள் இயங்கவேண்டும் என்பதைத் தம் பெண்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட பயிற்சியைப் பெற்றவள் நீ. நிலத்தில் பதிக்கப்பட்ட தண்டவாளங்களில் ஓடுகிற இரயில் வண்டியைப்போல், எல்லைக்கோடுகளை நழுவி நகரக்கூட முடியாமல் நடந்து கொள்ளுகிறாய்.

தேர்ந்தெடுத்த சொற்களைப் பயன்படுத்துகிற பழக்கம் உன்னிடம் உருவாக்கப்பட்டதால், உன் பேச்சில் பண்பிருக்கிறது. கெட்டவைகளையும் பயனற்றவைகளையும் நெருங்காமல் ஒதுங்கிக்கொள்ள, உன் உள்ளத்துக்குப் போதுமான பயிற்சி தரப்பட்டிருப்பதால், அது எப்போதும் மலர்ந்தே இருக்கிறது. நல்லவை அல்லாதவைகளுக்கு உன் மூளையில் இடமே இல்லாத காரணத்தால், உன் நடவடிக்கைகள் குறையற்றுக் காணப்படுகின்றன.

ஆனால்...என்னைப் பெற்றவர்கள் பயமுறுத்திய அளவுக்குப் பண்படுத்தவில்லை. அச்சத்தை ஊட்டினார்கள்; அதன் மூலம் அடிமைத்தனத்தைத்தான் வளர்த்தார்கள். இளமைக்கே உரித்தான துடிப்பு அடங்காப்பிடாரியாரின் நினைவைத்தான் உருவாக்கிற்று. படித்துச் சொல்வதிலும், இடித்துக் காட்டுவதிலும் வளராத நற்பண்புகள் பயிற்சி தருவதால் இதயத்தில் பயிராக்கப்படுகின்றன என்பதை அவர்கள் அறிவதில்லை.

"கூசுகிற விழிகளும், ஏசுகிற வாயும், இரக்கத்துக்கு இடங் கொடாத இதயமும், குறைபாடுள்ளவை என்று உடற்கூறு நிபுணர்களும், உளநூல் வல்லுநர்களும் கூறுவார்கள். உன்னைப்போன்ற நிறைந்த உள்ளங் கொண்டவர்களால் நெறி கெட்டவர்களைக்கூட நிலைதாழ்த்த முடியாது. அதனால்தான் என் நெஞ்சைத் திறந்து உன் முன் கொட்டுகிற துணிவு எனக்கேற்பட்டிருக்கிறது. நடந்த நிகழ்ச்சிகளை நான் உன்னிடம் கூறினால், ஏளனத்துக்காளானவன் என்று உன்னாலே கருதப்படும் நான் இரக்கத்துக்குரியவளாகத்தான் இருப்பேன்.

"உலகம் ஒருவருக்குச் சிறப்பைக் கொடுக்க ஒருகோடி நற்செயல்களை எதிர்பார்க்கிறது. ஆனால், ஒரு சிறு செயலே போதும் அந்தச் சிறப்பை அழிக்க என்றுதான் முடிவு செய்கிறது. நான் சொல்வதையெல்லாம் வெளியிட்டு, மனித சமுதாயத்தின் முன்னால் மானங்கெட்டவளாக என்னை நிறுத்தமாட்டாய் என்ற நம்பிக்கையோடு, நடைபெற்றவைகளை உன் முன்னால் எதுவும் விட்டுப் போகாமல் வெளியிடுகிறேன்.

"எனக்கும் அந்த இளைஞனுக்கும் எப்படிப் பழக்கம் ஏற்பட்டது என்பதே ஒரு விந்தையான விஷயம். நான் தேடிப் போகவில்லை; அவனும் என்னை நாடி வரவில்லை. வயிற்றுப் பசியால் தவித்தவன் வழியிலே கண்டெடுத்த காசைக்கொண்டு பசி தீர்த்துக்கொண்டான் என்பதைப் போன்றதுகூட அல்ல அது.

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15 / இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

"காலையில் திறந்துவிட்டு மேய்ந்து முடிந்தபிறகு மாலையில் மறுபடியும் அடைந்து மூடப்படும் பட்டிபோலத்தான் என்வீடு எனக்கு இருந்தது. படித்த பெண் தேடுகிற பழக்கம் இந்தநாட்டு இளைஞர்களுக்கு எப்படியோ ஏற்பட்டுவிட்ட காரணத்தால்தான் என்னைப் பள்ளிக்கூடம் அனுப்பிவைக்கத் துணிந்தார்கள் என்னைப் பெற்றவர்கள். அதிகாரத்துக்கும், அடக்குமுறைக்கும் உறைவிடமான என் வீட்டிலிருந்து வேதனைப்பட்டுக்கொண்டிருந்த எனக்கு, வெளியே போய்வருவது ஒருவித விடுதலைபோலத் தெரிந்தது. கட்டுகள் ஏதும் இல்லாத அந்த நிலை என்னை மிகவும் கவர்ந்தது. அதன் கால அளவை நீடித்துக்கொண்டால் என்ன என்று நினைத்தேன்; பிறகு அதற்கேற்றபடி நடந்தேன். வகுப்புகளில் படிப்பு நீடிக்கப்பட்டது என்று சமாதானம் சொல்லவும், தோழிகளிடம் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளப் போயிருந்தேன் என்று காரணங்காட்டவும் பழகிக்கொண்டேன். பூங்காக்களும், புதிதாக வெளியிடப்படுகிற திரைப்படங்களும் என்னுடைய பொழுதுபோக்குச் சாதனங்களாக அமைந்தன. சந்தேகம் தோன்ருதபடி நீண்ட இடைவேளைகளில் என்னுடைய நெஞ்சின் வேட்கையைத் தணித்துக்கொள்ளுவேன்.

"அன்று ஒருநாள் நான் சினிமா பார்த்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். ஆள் நடமாட்டமே இல்லை அப்போது. அமைதி அச்சத்தைப்போக்கும் என்பார்கள்; மாருக அதை அதிகப்படுத்திக்கொண்டிருந்தது.

"ஏய் நில்லு!" என்ற குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தேன். ஒரு போலீஸ்காரன் நின்றுகொண்டிருந்தான். கள்ளனைப் பிடிக்கவேண்டியவன் ஒரு கன்னியை மிரட்டவேண்டிய தேவையென்ன என்பது எனக்குப் புரியவில்லை.

"ஏன்?" என்றேன்.

"எல்லாவற்றையும் ஸ்டேஷனிலே வந்து சொல்லு" என்ருன் அவன்.

என்னுடைய உரிமை உணர்வு என்னைவிட்டு ஓடியேபோனது. வீட்டுக்குத் தெரிந்தால் என்னை வெட்டித் துண்டாடிவிடுவார்களே என்ற பயம் தலைதூக்கிற்று. பிடிபட்டவர்கள் போலீசுக்கு ஏதாவது கொடுத்தால் விடுபட்டுவிடுவார்கள் என்று யாரோ எப்போதோ சொன்னது என் நினைவுக்கு வந்தது. இருக்கிற சில்லரைகளை எல்லாம் எடுத்து அவனிடம் நீட்டினேன்.

"இலஞ்சமா கொடுக்கிருய்? நட ஸ்டேஷனுக்கு!" என்று தன் புனிதத்தன்மையை இந்தப் பொன்மொழிகளால் காட்டிக்கொண்டான்.

"யாரைய்யா அது? நான் நிற்கச் சொல்லிவிட்டுப்போனவளை நீ நடக்கச் சொல்லுகிருய்! கட்டிய கணவனுக்கு எதிரிலேயே அவளைத் தட்டிக்கொண்டுபோக நினைக்கிருயா?"

இந்தக் குரல்கேட்டு நாங்கள் இருவருமே திரும்பிப்பார்த்தோம். நாகரிகத் தோற்றத்தில் கண்ணன் நின்றுகொண்டிருந்தான்.

"உங்கள் மனைவியா? மன்னித்துக்கொள்ளுங்கள், சார்!" என்று கூறிவிட்டு நடந்தான் அந்தப் போலீஸ்காரன்.

மனைவி என்ற அந்தச்சொல்லுக்கு அப்போது ஒரு பொருளிருப்பதாகவே நான் நினைக்கவில்லை. மானங்காக்கப்பட்டது என்பதற்காகவே மகிழ்ந்தேன். இதற்காக அந்த இளைஞன் முன் நிலைதாழ்ந்தவளாக நிற்க என் மனம் இடங்கொடுக்கவில்லை.

"ஏன் அழைத்துப்போகட்டுமே. தவறு செய்தால்தானே தண்டிக்க முடியும்?" என்று வீராப்போடு நான் கேட்டேன்.

அந்த இளைஞன் சிரித்தான்; அந்தச் சிரிப்பு என்னைச் சிதைத்தது.

"உலகந்தெரியாதவள் நீ. உன்னை அழைத்துப்போய் இரவுராணி என்று குற்றஞ்சாட்டி உள்ளே தள்ளிவிடுவார்கள்!"

"அப்படி என்ருல்......" விளக்கத்தை எதிர்பார்த்து முடிக்காமல் விட்டுவைத்தேன்.

"அதுவும் தெரியாதா! இருளில் நின்றுகொண்டு வழியே போகிறவர்களை........"

"நான் இருளில் நிற்கவுமில்லை, எவரையும் அழைக்கவுமில்லை!"

"நீ அழைத்காத மனிதனை கோர்ட்டுக்கு அவர்கள் அழைத்து வருவார்கள். ஆண்டுக்கு இத்தனை வழக்கு என்று அவர்கள் கணக்குக் காட்டவேண்டும். எண்ணிக்கை குறைந்தால் எதிர்ப்படுபவர்களையெல்லாம் குற்றவாளிகளாக ஆக்குவார்கள். விளக்கெரியாத சைக்கிள்கள், விவஸ்தையில்லாத பெண்மணிகள், விதிமுறைகளைப்பற்றி அறியாத மனிதர்கள்—இப்படிப்பட்டவைகள்தான் ஏராளமாகக்கிடைக்குமே"!

என்னை அவமானப்படுத்தவே, அச்சத்தை ஊட்டுவதுபோலத் தோன்றிற்று எனக்கு அப்போது.

"நான்தான் குற்றமே செய்யவில்லையே, சட்டம் என்னை என்ன செய்துவிடும்?" என்று கேட்டேன்.

"சட்டம் சாட்சிகளைத்தான் நம்புமே தவிர, குற்றஞ்சுமத்தப்பட்டவர்களைத் திரும்பிக்கூடப் பார்க்காது. கண்ணுல் பார்த்ததுபோலவே கூறும் எண்ணற்றவர்களை அவர்கள் கைவசம் வைத்திருக்கிருர்கள்."

அவிழ்த்துவிடலாம் என்று இழுக்க, முடிச்சு மேலும் இறுகிப்போனதைப் போலானது என்நிலை. எதுவுமே தெரியாத நான், எல்லாவற்றையுமே உணர்ந்தவனுகக் காட்டிக்கொள்ளும் அந்த இளைஞனேடு எப்படி எதிர்வழக்காடமுடியும்? இனி அவனேடு பேசுவதே தவறு என்ற முடிவுக்கு வந்தேன். எப்படி அவனைத் துண்டித்துவிட்டுப் போவது என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. தூசியாக இருந்தால் துடைத்துவிட்டுப்போகலாம். பாசியாக இருந்தால் கழுவிவிட்டு நடக்கலாம். இக்கட்டிலிருந்து என்னை மீட்டவனை இடைவழியில் நிறுத்திவிட்டு எப்படிப்போவது?

"உங்கள் உதவிக்கு என் நன்றி. எனக்கு நேரமாகிறது" என்றேன்.

"போகலாம். வா" என்று சொல்லிக்கொண்டே நடந்தான்.

நானும் நடந்தேன், என்ருல் என்னையே ஏமாற்றிக்கொள்வதாகும்; அதனுல்தான் தொடர்ந்தேன் என்ற உண்மையைச் சொல்லுகிறேன். இந்தத் துறையில் அவனுக்கிருந்த அனுபவம், எங்கள் இருவருடைய அறிமுகத்தை முதல் அத்தியாயமாகவே எழுதிமுடிக்க வழிசெய்தது. என்னை வீட்டில் கொண்டுவந்துவிட்டபிறகுதான் அவன் சென்ருன். (தொடரும்)

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.